# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 09 அதிர்வு 103 தை 2026 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

Budget Friendly
Home Improvements Pty Ltd
Quality
Renovation Work
0400 287 198












ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank


Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403

royalinfomoney@gmail.com


GRACE GROCERY
FRESH FINDS GREAT DEALS
INDIAN AND SRILANKAN
GRACE GROCERY
INDIAN AND SRILANKAN GROCERY
Our Current Location
Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings
Our New Locations Opening Soon
• Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
• Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026





# போரின் இசையாக நிலைத்து நிற்கும் இசைப்பிரியன்

● மறவன்

யார் இந்த இசைப்பிரியன்? அவுஸ்திரேலியா மெல்பேர்ணிலும், சிட்னியிலும் நிகழும் அவரது இசை நிகழ்ச்சியை நாம் ஏன் பார்த்து ஆதரவு வழங்க வேண்டும்?

இன்றைய ஈழத்து இளைய தலைமுறையினரிடம் நன்கு பரிச்சயமானவராகவும், இவர் தான் என்று அறியப்படாமலேயே, அவர் இசையமைத்த பல பாடல்களை மக்கள் ரசித்துக் கொண்டாடும் கலைஞன் அவர். இது அவரால் இசையமைக்கப்பட்ட பாடல்களா, எனும் ஆச்சரியத்திற்கும் சொந்தக்காரனாக விளங்கும் பல்துறை வாத்தியக் கலைஞர்தான் இசைப்பிரியன்.

1999, 2000 ஆம் ஆண்டு காலப்பகுதி.

வன்னியில் தாயகப்பாடல்களில் ஒரு புத்துணர்ச்சியோடு புதிய பாடல்கள் சில பிறக்கின்றன.

ஆனையிறவு வெற்றிக்காக பின்னாளில் மாவீரனான குட்டிக்கண்ணன் பாடிய “சிட்டுக் குருவி மெட்டுப் போட்டு” பாடல் ஒரு கவனயீர்ப்பைப் பெற்றதென்றால், செம்பருத்தி எழுதிய “களத்திலிருந்து அம்மாவுக்குக் கடிதம் எழுதினேன்“ என்ற வசீகரன் பாடிய பாடல் பலரையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

பின்னாளில் மேஜர் இளந்தீரனாக வீரச்சாவடைந்த போராளியின் குரலில் “கரும்புலியாய் பிறப்பெடுத்த கதையைச் சொல்லவா” என்ற பாடல் பாடகர் சிட்டு இல்லாக் குறையை நிரப்புவதாக எண்ண வைத்தது. கூடவே துளசிச் செல்வன் என்ற போராளிக் கவிஞனையும் இனங்காட்டியது.

களத்திலிருந்து அம்மாவிற்கு கடிதம் எழுதினேன் - செம்பருத்தி என ஆரம்பத்தில் அறியப்பட்ட கவிஞர் கலைப்பரிதியின் வரிகளில் உருவான, பாடகர் வசீகரனின் குரலில் வெளியான இசைப்பிரியனின் 3 ஆவது பாடல் தமிழீழ மக்கள் மனங்களை மட்டுமன்றி தமிழீழத் தேசியத் தலைவரையும் அப்போது வயதில் இளையவரான இந்தக் கலைஞன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது. இந்தப் பாடலே கலைப்பரிதி , வசீகரனின் முதலாவது பாடலுமாகும்.

இவர் திறமையை அப்போழுதே உணர்ந்து கொண்ட தமிழீழத் தேசியத் தலைவர், இசைப்பிரியனை நேரில் அழைத்துப் பாராட்டியது மட்டுமன்றி, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடாக வன்னிக்குள் அப்போது கிடைப்பதற்கு அரிதான ஒரு “கீபோர்ட்டை” வழங்கி ஊக்கப்படுத்தினார்.

இதன் பின்னர், இன்று வரை புதிய மெட்டுக்கள் படைப்பதை ஓயாது தொடர்ந்து கொண்டிருக்கின்றன இசைப்பிரியனின் விரல்கள்.

மிகக் குறுகிய மூல வளங்கள், எரிபொருள் பற்றாக்குறை, வெறும் 3 மணித்தியாலம் மட்டுமே கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட மின்சாரம் இவற்றுக்கு நடுவே Pentium 4 கணினி, warmup ஆகி, ஒலிப்பதிவு செய்வதற்குரிய மென்பொருட்கள் திரையில் தோன்றவே 10-15 நிமிடங்கள் ஆகும். ஆனால் இத்தனை சிரமங்களையும் தன் திறமைக்கான வெற்றிக்கான படிக்கல்லாக மாற்றினார் இசைப்பிரியன்.

அன்று அவர் குறுகிய மூல வளங்களைப் பயன்படுத்தி நிதர்சனம் நிறுவனத்தின் தர்மேந்திரா கலையகத்தில் உருவாக்கிய பல பாடல்களை இன்று Stereo player கேட்கையில் பலரும் வியப்படைவீர்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்களும் இல்லை.

இவரது பெயரினை இறுவட்டுக்களின் முன் பக்கத்தில் பதித்து இசைப்பிரியனின் இசையில் என்ற அடைமொழியுடன், வரலாற்றில் இசையமைப்பாளர் பெயரை முன்னிலைப் படுத்தி தமிழீழத்தில் வெளியான இறுவட்டுக்கள் இவரின் திறமைக்குச் சான்று பகர்கின்றன.

பல புதிய இறுவட்டுக்கள், புதிய இசைப் பரிணாமம், புதிய இளங் கவிஞர்கள் - போராளிக் கவிஞர்கள், புதிய இளம் பாடகர்களுக்கான வாய்ப்புக்கள் இவரது வருகையைத் தொடர்ந்து உருவானது.

தமிழ் சினிமாவின் அதிகளவான பிரபல கலைஞர்கள் பலரும் இவரது இசையில் பாடியிருப்பது இவ் வேளையில் நினைவிற் கொள்ள வேண்டிய சிறப்பம்சம்.

அலைபாடும் பரணி இறுவட்டு, கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் வெளியீடாக “வரும் பகை திரும்பும்”, வெல்லும் வரை செல்வோம், விழி நிமிர்த்திய வீரம், தீச்சுவாலை முறியடிப்புச் சமரில் எல்லைப் படை வீரர்களின் தியாகத்தைப் பேசுகின்ற தீக்குளித்த நேரம் ,

தமிழீழத் தலைநகரின் சிறப்புக்களைப் பேசும்’ முடி சூடும் தலைவாசல்’, பொன்னம்மான் கண்ணிவெடிப் பிரிவினரின் வெளியீடான’ வாகையின் வேர்கள்’, ஐபிசி வானொலிக்காக உறவொலி,

மாவீரர் பெருமை பாடுகின்ற

கல்லறை தழுவும் கானங்கள், மண்ணுறங்கும் மாவீரம், ஆழிப்பேரலை நினைவான பாடல்கள், அனுராதபுரத்து அதிரடி இசையமைப்பாளர் செயல்வீரனுடன் இணைந்த ‘தேசத்தின் புயல்கள் பாகம் 03’, கடற்கரும்புலிகள் பெருமை சொல்லும் பாடல்கள், புதிதாய்ப் பிறக்கின்றோம், விடுதலை நெருப்புக்கள்,

இப்படி ஏராளமான இறுவட்டுக்களுடன்இறுதியில் முள்ளிவாய்க்கால் மௌனிப்பின் போதுபாதி கலையகத்திலும், மீதிப் பகுதி பங்கருக்குள்ளும் ஒலிப்பதிவு செய்து முழுமையாக நிறைவு செய்யப்படாத வேர்விடும் வீரம் இறுவட்டுடன் இவரது தாயகத்திலிருந்து இவர் ஆற்றிய பணி நிறைவிற்கு வந்தது.

புதிய பாடலாசிரியர்கள், புதிய பாடகர்கள், என்று இளரத்தம் பாய்ச்சப்பட்டு தாயகப்பாடற் களம் புதிய பரிமாணத்தை எட்டியது.

மேற்சொன்ன பாடல்களுக்கான இசையமைப்பாளர் இசைப்பிரியனின் பயணம் இப்படித்தான் தொடங்கியது.

அவரது போராட்டப் பயணமும் இசையமைப்பாளன் என்கிற பயணமும் சமகாலத்திலானது. அன்றிலிருந்து முள்ளிவாய்க்கால் முடிவுவரை சுமார் நாற்பது இசைப்பேழைகளில் நூற்றுக்கணக்கான போரெழுச்சிப் பாடல்களை இசையமைத்துத் தந்தவர் இசைப்பிரியன். கூடவே தனது ஒரு காலையும் களத்தில் இழந்தவர்.

முள்ளிவாய்க்கால் பேரழிவின் பின்னரான காலத்திலும் இசைப்பிரியன் ஓய்ந்துவிடவில்ல. அதன் பின்னரும் 36 இசைத் தொகுப்புக்களில் நூற்றுக்கணக்கான பாடல்களை எமது தாயக விடுதலைக்காக இசையமைத்திருக்கிறார்.

மொத்தத்தில் 900க்கும் அதிகமான தாயகப்பாடல்களை இவர் இசையமைத்திருக்கிறார் என்பது நம்ப முடியாத எண்ணிக்கையே.

இவற்றைவிட சில நூறு ஈழத்துச் சினிமாப் பாடல்கள், கோயில்களுக்கான பக்திப் பாடல்களுட்பட ஏறத்தாழ 1500 க்கும் மேற்பட்ட பாடல்களையும், அம்மா நலமா , கடலோரக் காற்று, உயிரம்புகள், விடுதலை மூச்சு உள்ளிட்ட முழு நீளத் திரைப்படங்களுக்கும், புலிகளின்குரல் கலையகத்தில் பல வானொலித் தொகுப்புக்கள் , நாடகங்களிற்கான பின்னணி இசை என தொடர்ச்சியாக வீசிக் கொண்டிருக்கிறது இசைப்பிரியன் என்கின்ற நமது ஈழத்து இசைப்புயல்.

தமிழகத்தில் இவர் தங்கியிருந்த காலத்தில் திருமகன் எனும் பெயரிலும், பின்னர் ஐரோப்பாவுக்குப் புலம்பெயர்ந்த பின் மீண்டும் இசைப்பிரியனாகவும் தாயகத் தமிழிசைக்குரிய இவரது பங்களிப்பு புதிய பரிணாமத்துடன் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

இசையமைப்பாளர் சிறிகுகன், கண்ணதாசன் மாஸ்டர் (யாழ். நுண்கலைக் கல்லூரி விரிவுரையாளரான இவர் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தில் கைதாகினார்) ஆகியோரின் இளைய சகோதரனான சிறிமயூரன் எனப்படும் இசைப்பிரியன்- பாரம்பரிய இசைக்குடும்பத்திலிருந்து வந்தவர்.

இசைப்பிரியன் -ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டக் கலைத்தளத்தின் முக்கியமான ஒரு தூண்.

முதன்முதலாக இம்மாதம் அவுஸ்திரேலியாக வருகிறார்.

பெப்ரவரி 7ஆம் நாள் மெல்பேணிலும், 21ஆம் நாள் சிட்னியிலும் இசைப்பிரியனின் இசையில் இசைநிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன. கூடவே எமது தாயகக் கலைஞன் Bhanu octapad உம் கலந்துகொள்கிறார். ■

# இலவச பாலர் பள்ளி (Free Kinder): உங்களுடைய குழந்தையை 2026 ஆம் ஆண்டுக்குச் சேர்த்துக்கொள்ளுங்கள்.




விக்டோரியாவில் மூன்று மற்றும் நான்கு வயது குழந்தைகளுக்கு இலவச பாலர் பள்ளி கிடைக்கிறது. இது குடும்பங்களுக்கு ஆண்டுக்கு சராசரியாக ஒரு குழந்தைக்கு $2,400 சேமிக்கும்.

இரண்டு வருட இலவச பள்ளி உங்களுடைய குழந்தையின் முக்கிய திறன்களை வளர்க்க உதவும், இதனால் அவர்கள் பள்ளியிலும் வாழ்க்கையிலும் சிறப்பாகச் செயல்படுவார்கள்.

இலவச பாலர் பள்ளி அனைவருக்கும் ஏற்றது. உங்களுக்கு ஒரு சுகாதாரப் பராமரிப்பு அட்டை அல்லது ஆஸ்திரேலிய குடியுரிமை (அல்லது அது போன்ற) தேவையில்லை.

மேலும் தகவல்களை vic.gov.au/kinder/tamil இல் அறியவும்.

VICTORIA State Government | Department of Education
KINDERGARTEN Victorian Government Approved

Best Start
Best Life



ADVERTISEMENT

# *Wishing you all a* Happy Pongal





**Jess Wilson MP**
**Victorian Liberal Leader**
Member for Kew
9853 2999 JessWilsonKew
jess.wilson.mp@parliament.vic.gov.au



**Evan Mulholland MP**
Member for Northern Metropolitan Region
9651 8242 EvanMulhollandMP
evan.mulholland@parliament.vic.gov.au



**Richard Welch MP**
Member for North-Eastern Metropolitan Region
9878 4113 RichardWelchMP
richard.welch@parliament.vic.gov.au



**Ann-Marie Hermans MP**
Member for South-Eastern Metropolitan Region
9794 7667 AnnMarieHermansMP
ann-marie.hermans@parliament.vic.gov.au



**Trung Luu MP**
Member for Western Metropolitan Region
8742 3226 TrungLuuWesternMetro
trung.luu@parliament.vic.gov.au

LIBERAL VICTORIA

Authorised by Jess Wilson MP, 12 Parkhill Road, Kew VIC 3101

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 103 தை 2026 தொ.பே:1800 960 162

## 2025 : மனிதகுலத்தின் மீது வல்லரசுகள் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகை!

2025ஆம் ஆண்டு உலக வரலாற்றில் ஒரு தோல்வியடைந்த ஆண்டாக அல்ல் மனிதகுலத்தின் மீது வல்லரசுகள் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையாகவே கடந்து சென்றுள்ளது.

சமாதானம் தொடர்பில் பேசப்பட்ட அதே நேரத்தில் போர்கள் தீவிரமடைந்தன. மனித உரிமைகள் குறித்து உபதேசங்கள் வழங்கப்பட்ட மேடைகளிலேயே மனித உயிர்கள் குப்பை போல தூக்கி எறியப்பட்டன

உக்ரைன் முதல் மத்திய கிழக்கு வரை போர் அரசியல் ஒரு தொழிலாகவே தொடர்ந்தது. ஆயுதம் தயாரிக்கும் நாடுகள் லாபம் குவித்தன. அதைப் பயன்படுத்தும் வறிய நாடுகள் கல்லறைகளாக மாற்றப்பட்டன.

வல்லரசுகளின் அதிகாரப் போட்டி, இருப்புப் போராட்டம் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட போர்களால் லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

அமைதி, வளர்ச்சி, மீட்பு என ஐக்கிய நாடுகள் சபை மேடைகளில் முழக்கங்கள் எழுந்துகொண்டிருந்த போதே, வல்லரசுகளின் அதிகார அரசியல் மனிதகுலத்தை நசுக்கியது. 2025 இல் உலக அரசியல் தனது மனித முகத்தை மட்டும் அல்ல; மனச்சாட்சியையே இழந்தது எனலாம்.

வல்லரசுகளின் மூடிய அறைகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கான விலையை, குண்டுகளுக்குள் சிக்கிய குழந்தைகளும், இடம்பெயர்ந்த குடும்பங்களுமே செலுத்தினர்.பாலஸ்தீனத்தில் அரங்கேறிய கொடூரம் இதற்கு சான்றாகும்.

2025 இல் டொனால்ட் ட்ரம்ப் என்ற பெயர், உலக பொருளாதார அச்சுறுத்தலின் அடையாளமாக மாறியது. “அமெரிக்கா பெஸ்ட்” என்ற முழக்கம், உலகத்துக்கான எச்சரிக்கையாகவே ஒலித்தது.

புதிய வரி விதிப்புகள், வர்த்தகத் தடைகள், பொருளாதார மிரட்டல்கள் என இவை அனைத்தும் உலக சந்தைகளை ஒரு அரசியல் ஆயுதமாக மாற்றின. நட்பு நாடுகள் கூட சந்தேகத்திற்குரிய எதிரிகளாக மாற்றப்பட்டன.

ஈரான் – இஸ்ரேல் – அமெரிக்கா இடையிலான பதற்றம், 2025 இல் மனிதகுலத்தின் மனச்சாட்சியை கடுமையாக நசுக்கியது.

ஈரானில் தற்போது வெடித்துள்ள மக்கள் போராட்டங்களின் பின்னணியில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இருப்பதாக அந்நாடு கூறுவது வெறும் அரசியல் குற்றச்சாட்டு அல்ல் நிகழ்வுகள் அதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே நகர்கின்றன.

வெனிசுலாவுக்குள் புகுந்து அந்நாட்டு ஜனாதிபதியை கைது செய்யும் அளவிற்கு வல்லரசுகள் எல்லை மீறி செயல்படுகின்றன. இது ஜனநாயகமல்ல. இது உலகளாவிய அரசியல் அடாவடித்தனம்.

ட்ரம்ப், இஸ்ரேல் பிரதமர் உள்ளிட்ட சில தலைவர்களின் தன்னிச்சையான, பொறுப்பற்ற முடிவுகள்,ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் உண்மையில் செயல்படுகின்றனவா, என்ற கேள்வியை உலகின் முன் நிறுத்தியுள்ளது.

2025 இல் அரங்கேறிய சம்பவங்களின் தாக்கம் 2026 இல் எதிரொலிக்கத்தான் போகின்றது. ட்ரம்ப் போன்ற தலைவர்கள் பலம்பொருந்திய நாடுகளின் தலைவர்களாக இருப்பதால், “பைத்தியம் பலதையும் செய்யும்” என்ற பயத்துடனேயே 2026 ஐ வரவேற்க வேண்டிய நிலை உள்ளது.

இந்தியா – பாகிஸ்தான் பதற்றம், கம்போடியா – தாய்லாந்து மோதல், உக்ரைன – ரஷ்யா போர், ஆபிரிக்க நாடுகள் மற்றும் மத்திய கிழக்கில் நீடிக்கும் தீப்பொறிகள் என அனைத்தும் மூன்றாம் உலகப் போர் என்பது இனி கற்பனை அல்ல, அரசியல் அட்டவணையில் எழுதப்பட்டுள்ள அச்சுறுத்தல் என்பதை 2026 க்கு முன்பே உலகுக்கு உணர்த்திவிட்டன. ஆஸ்திரேலியாவில் மட்டுமல்ல உலகெங்கும் வாழ்க்கை செலவினம் மக்கள் மீது பெரும் சுமையாக சுமத்தப்பட்டிருக்கின்ற போது அமெரிக்காவின் ஆட்டத்துக்குள் சிக்கி ஆஸ்திரேலியா சிதறாமல் இருந்தால் சரி.

# பிரிவினைவாதிகளா திராவிட கட்சிகள்?

கார்த்திகை மாத இதழில் சுயம் அறியாதை - 100 எனும் தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் எழுதபட்டிருந்தது. சுயமரியாதை இயக்கத்தின் சுயரூபம் அதன்மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இது சிலருக்கு நெத்தியடியாகவும், மேலும் சிலருக்கு மரண அடியாகவும் அமைந்தது.

இதனால் தலையங்கத்துக்கு எதிராக சிலர் கேள்விக்கணைகளையும் தொடுத்திருந்தனர். அத்துடன் அந்த தலையங்கம் யார் எழுதியது பெயர் போடப்படவில்லை என்றும் கிழித்தனர். அதேவேளை கன்பராவிலிருந்து திருமதி. சுமதி என்பவர். எதிரொலிக்கு மறுப்பு அறிக்கையும் அனுப்பி வைத்தார்.

முதலில் அந்த அறிக்கையை பதிவிடுகின்றோம். அதன் பின்னர் எழுப்பட்ட கேள்விகளுக்கு எதிரொலி அளித்த பதிலையும் காணலாம்.

“ முதலில் திராவிட கட்சிகள் பிரிவினைவாதிகளா? எந்த விதத்தில் பிரிவினைவாதிகள்? தனி தமிழ்நாடு கேட்டதினாலா?

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த சமயத்தில் எத்தனை சமஸ்தானங்கள், எத்தனை மன்னர்கள் இருந்தார்கள் என்கின்ற கணக்கு தெரியுமா?

அவர்களை எல்லாம் என்ன சொல்லி ஒன்றிய அரசு ஒன்றிணைத்து என்று தெரியுமா? சரி அவ்வளவு ஏன், தனித் தமிழ்நாடு அண்ணா கேட்டதை தொடர்ந்து, ஒன்றிய அரசு புதிதாக சட்டம் இயற்றிய வரலாறு தெரியுமா? - என்றெல்லாம் கேள்விகள் தொடுத்து அறிக்கை அனுப்பட்டுள்ளன.

‘ஈரோடு’ என்பது ஊரின் பெயர், ‘வெங்கட்டர்’ என்பது தந்தை பெயர், ‘ராமசாமி’ என்பது அவரின் பெயர். ‘நாயக்கர்’ என்பது என்ன? 1929ல் பெரியார் கழட்டி விட்ட செருப்பு. அந்த பிய்ந்து போன செருப்பை பலரும் தலையில் சுமந்து கொண்டு திரிவதை கண்டால் கொஞ்சம் பாவமாக தான் இருக்கிறது.

அவரவர் இயக்கத்திற்கு அவரவர்கள் தான் பெயர் சூட்டிக் கொள்வார்கள்.

‘சுயமரியாதை இயக்கம்’ என்பது தந்தை பெரியாரின் இயக்கம். அதற்கு சாவர்க்கர் வந்தா பெயர் வைப்பார்? தங்கள் வீடு குழந்தைகளுக்கு அண்டை வீட்டார்கள் பெயர் வைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் வாதம் தான் இது. “ எனவும் விஞ்ஞான விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ்ஸில் மட்டுமில்லை, வீட்டை விட்டு வெளியில் வந்தாலே பார்ப்பன ஆதிக்கம் நிறைந்த காலம் தான் அது என்ற போதும், தந்தை பெரியார் காங்கிரஸில் இருந்து வெளியே வந்த வரலாறும் தெரியாது போலும்.

காங்கிரஸ் மாநாட்டில் தந்தை பெரியார் வகுப்புவாரி பிரதிநிதித்துவ தீர்மானம் தோற்கடிக்கப்பட்டதை தொடர்ந்து வெளியே வந்த வரலாறு தெரியுமா? அதற்கு முன்பு எத்தனை முறை அந்த கோரிக்கையை வைத்தார் என்ற வரலாறு தெரியுமா?

வருடா வருடம் தீபாவளி கொண்டாடுபவர்கள், அந்த விழா எதற்காக கொண்டாடப்படுகிறது என்பது தெரியுமா?


தென் இந்தியாவிலும் வட இந்தியாவிலும் கொண்டாடப் பட்டாலும், இரண்டு பிரதேசங்களிலும் ஒரு காரணத்தைத்தான் சொல்லி கொண்டாடுகிறார்களா? விழா என்னவோ ஒன்று தான், மதம் என்னவோ ஒன்று தான், காரணங்களும், காரண பெயர்களும் மட்டும் எப்படி மாறுபடும்.

தமிழ்நாட்டு பிஜேபிக்காரர்கள் ‘முதல்வர் தீபாவளிக்கு வாழ்த்து சொல்வதில்லை’ என்று புலம்பி தீர்க்கிறார்கள், இதில் தீபாவளி வாழ்த்து முதலில் வருவது இவர்களிடம் இருந்து தானாம். வரலாறு தான் தெரியவில்லை என்றால், நாட்டு நடப்பும் தெரியாது போலும்!

மேலும், சாமி கும்புடறதுக்கு முன்னாடி இனிப்பை சாப்பிட சாமி கண்ணை குத்தும் என்று சிறிய வயதில் இருந்தே மதத்தை திணிக்கும் வழக்கம் பகுத்தறிவிற்கு கிடையாது.

பகுத்தறிவு உண்மையை போதிக்கும். அறிவிருப்பவர்கள் எடுத்துக்கொள்வார்கள், இல்லை என்றால் பின்னாளில் புரிந்து கொள்வார்கள். அதுவரை அவர்கள் நம்பிக்கையில் தலையிடுவதில்லை. அது இணையர் ஆனாலும், குழந்தைகள் ஆனாலும். - சுயமரியாதை 100

கணக்கும் கொஞ்சம் வராது போல. 55 ஆண்டுகள் இல்லை, 58 ஆண்டுகளாக திராவிட கட்சிகள் தான் ஆட்சி புரிகின்றன. அதில் நேர்மையான தலைவர்கள் பட்டியல் ஏராளம். ஆனால் அவர்களை எல்லாம் மட்டம் தட்ட போடப்பட்ட பட்டியல் தான் நகைச்சுவையின் உச்சம். கக்கன், காமராஜர், ராஜாஜி, பக்தவச்சலம். கிளோஸ்ட் டீ இஸ்கீம் (மூடிய விற்பனை திட்டம்) பற்றிய வரலாறு தெரியுமா? எனவும் கேள்விகள் அடுக்கப்பட்டுள்ளன அந்த விளக்க அறிக்கையில்.




தந்தை பெரியார் காங்கிரெஸ்ஸை விட்டு வெளியே வந்தார் சரி. ராஜாஜி, அண்ணாவுடன் கூட்டணி வைத்தது காங்கிரஸில் இருந்த போதா, காங்கிரெஸ்ஸை விட்டு வெளியில் வந்த அப்புறமா? எதற்காக வெளியே வந்தார் ராஜாஜி? வரலாறை படிங்க பாஸ்!!! - சுயமரியாதை 100

‘துவைத்த வேட்டி பின்னாடி காய்கிறது. அதை போட்டுக் கொண்டு வருகிறேன்’ என்று சொன்ன தலைவரின் வரலாறு தெரிந்திருக்கிறது, பாவம், ஒரே வேட்டியை நான்கு நாட்களுக்கும், சட்டை பொத்தான்களை கூட சரியாக போட்டிருக்கிறோமா என்று கவனிக்காமல் மக்கள் பணி செய்த அண்ணாவை தெரியவில்லை.

காமராஜர் இறந்த போது அவர் சட்டை பையில் சில காசுகள் இருந்தன என்ற வரலாறு தெரிகிறது, பாவம், அண்ணா இறந்த பொழுது அவருக்கு எவ்வளவு கடன் இருந்தது, அந்த கடன் எதனால் ஏற்பட்டது என்ற வரலாறு தெரியவில்லை. இந்த வரலாறே தெரியாத பொழுது , பாவம், திமுக ஆட்சிக்கு வரும் முன்னரே கலைஞர் வீடும் காரும் வைத்திருந்த வரலாறு எப்படி தெரிந்திருக்கும்.

‘என் பெயர் மாணிக்கம். எனக்கு இன்னொரு பெயர் இருக்கிறது’ என்ற பாட்சா வசனத்தை போல, சுயமரியாதை இயக்கத்திற்கு இன்னொரு பெயர் இருந்த வரலாறு தெரியுமா? அந்த காலங்களில் சுயமரியாதை இயக்கத்திற்கு மக்களிடையே பெயர் ‘பறையன் கட்சி’. சுயமரியாதை இயக்கத்தின் மூலமே ஜாதி வெறி ஒளிந்திருக்கிறது என்பதை எந்த தலைவர் எங்கு சொல்லி இருக்கிறார் என்ற வரலாறை, கட்டுரை எழுதியவர் தெரிவித்தால், அந்த வரலாறை நாங்கள் தெரிந்து கொள்கிறோம்.

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# பிரிவினைவாதிகளா திராவிட கட்சிகள்?

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் 'சுயமரியாதை இயக்கம்', 1944ஆம் ஆண்டு 'திராவிட கழகமாக' மாறியது. இதில் எங்கிருந்து சுயமரியாதை இயக்கம் ஜாதி வெறியை ஒழித்தது என்று பறைசாற்றுவது. பல சமயங்களிலும் வாட்ஸாப் வரலாறு இப்படி தான் காலை வாரும். - சுயமரியாதை 100

1965 ஹிந்தி எதிர்ப்பு (திணிப்பு) போராட்டத்தின் பொழுது நிகழ்ந்த துப்பாக்கி சூட்டில் பலர் உயிரிழந்தனர். அப்போது உள்துறை அமைச்சராக இருந்த கக்கன், அந்த துப்பாக்கி சூட்டிற்கு வருத்தம் எதுவும் தெரிவித்தார்களா? தந்தை பெரியாரின் நேர்மையை கேள்வி கெட முடியாவிட்டால், வேறு காரணங்களை தூக்கி வருவதில் ஒன்று கீழ்வெண்மணி. கீழ்வெண்மணியில் 'திராவிட விவசாய தொழிற்சங்கம்' இருந்த வரலாறு உண்டு. அதன் உறுப்பினர்கள் அனைவரும் இடைநிலை சாதியை மட்டுமே சேர்ந்தவர்களா?ஹதஞ்சை ஜில்லா பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் 1952' என்ற சட்டம் யாரால் வந்தது? ஒரு நாள் காலையில் வேலைக்கு போனால் மறுநாள் வேலைக்கு வேண்டாம் என்று சொல்லி விடுவார்கள். வேலைக்கு எந்த உத்திரவாதமும் கிடையாது. அப்படி வேலை திடீரென மறுக்கப்பட்டால் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று அந்த சட்டம் உறுதி செய்தது.அது பெரியாரின் கோரிக்கையால், திராவிட விவசாய தொழிலாளர் சங்கத்தின் போராட்டத்தால் கிடைத்தது. - சுயமரியாதை 100

சுயமரியாதை இயக்கத்தார் என்ன சொல்வது! ஒரு பெண்ணாக நான் சொல்கிறேன், பெண் சுதந்திரம் என்பது தமிழ்நாட்டை பொறுத்தவரை தந்தை பெரியாரால் மட்டுமே சாத்தியமானது. எந்த தலைவன் அல்லது கவிஞன் உன் கூந்தல் என்ன பூ கூடையா, முடியை கத்தரித்து கொள், ஆணை போல கன்னியமான வசதியான உடையை அணிந்து கொள், கரண்டியை தூக்கி எரிந்து விட்டு நூலை கையில் எடு, பெண்கள் ஏரோபிளான் ஓட்ட வேண்டும், வீட்டில் திருமணம் என்றால் இப்போது என்ன அவசரம் என்று கேள் என்று சொன்னான்! 'பூனைகளால் எலிகளுக்கு எப்படி நன்மை விளையாதோ, அது போல ஆண்களால் பெண்களுக்கு நன்மை விளையாது' என்று சொன்னவர் எங்கள் தந்தை பெரியார். தன் வீட்டு பெண்களை சமூக வாழ்க்கையில் ஈடுபட வைத்ததுடன் இல்லாமல், மக்கள் போராட்டங்களுக்காக சிறை செல்லவும் தயார் படுத்தியவர் தந்தை பெரியார். கோவிலுக்கு போக மாட்டேன் என்று சொன்ன 14 வயது மகளை கன்னத்தில் அறைந்து பெண் விடுதலை பாடிய பாரதியை யாருடன் ஒப்பிடுவது! இதில் துணைக்கு திருவிக வேறு!!!! - சுயமரியாதை 100

கனிமொழி கருணாநிதி அி யாக இருப்பது கண்ணனுக்கு தெரியவில்லை போலும்!!!! பெண்களுக்கு சொத்துரிமை, உரிமை தொகை, பெண்கள் சுய உதவி குழு, பேருந்து பயண திட்டம் இவை பற்றியாவது தெரியுமா? உள்ளாட்சி தேர்தலில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு பற்றி ? - சுயமரியாதை 100

பைபிளோ பைபில், குரானோ குரான் நூல்கள் எல்லாம் யார் வெளியீடு! இந்தியாவில் பெரும்பான்மை மதம் எது? ஜாதி எந்த மதத்தில் இருக்கிறது? அது எப்படி பிற மாதங்களுக்கு பரவியது? புற்றுநோய் வந்தால் புற்றுநோயை பற்றி தான் பிரத்தானமாக பேச முடியும், சளி, காய்ச்சல் பற்றியா பேச முடியும். கொஞ்சமேனும் பகுத்தறிந்தால் இது போன்ற மூடத்தனமான கேள்விகள் எழாது. - சுயமரியாதை 100

1967க்கு முன்னர் தமிழ்நாட்டு பொருளாதாரத்தை பிஹாருடன் ஒப்பிடலாம். தமிழ்நாடு மட்டும் தனி நாடக இருந்தால் அதை ஐரோப்பா நாடுகளுடன் தான் ஒப்பிட வேண்டியிருக்கும் என்று சொன்னவர் திராவிட இயக்கத்தை சேர்ந்தவரில்லை. பொருளாதாரத்தில் நோபல் பரிசு வென்ற அமர்த்திய சென். ஊழலே இல்லாத கக்கன், காமராஜர், ராஜாஜி ஆட்சி சாதிக்க முடியாததை, வெறும் தம்பிகளை வைத்திருந்த அண்ணாவும், திருட்டு ரயில் என்றும் ஆசியாவின் முதல் பணக்காரர் என்றும் அந்த கால புரட்டுகளை புறம் தள்ளி, எல்லா மக்களுக்குமான ைஉடரளளைந அரசியல் செய்த கலைஞ ரால் மட்டுமே சாத்தியமானது. அதை இப்போது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்.

இவ்வளவு அவதூறுகளை கண்டம் விட்டு கண்டம் வந்தும் பரப்பிக் கொண்டிருப்பவர்களுக்கும் 'அயலகத் தமிழர் நல வாரியம்' அமைத்து அவர்கள் நலம் காக்கும் முதலமைச்சரை தமிழ்நாடு கொண்டிருக்கிறது. திராவிட மாடல் அரசியல் காலம் தாண்டியும் கொண்டாடப்படும்.

சுயமரியாதை தமிழ்நாடு மக்களின் ரத்தத்தில் கலந்த ஒன்று. 1000 ஆவது ஆண்டையும் கொண்டாடும்!!!! என எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

முதலில் இவ்வளவு அவசரமாக ஈ.வெ.ரா வின் எந்தவொரு எழுத்துக்களையும் படிக்காமலும், மிகவும் சாதுர்யமாக பதிலே அளிக்க முடியாத கேள்விகளை தவிர்த்தும் தலையங்கத்திற்கு எதிர்வினையாற்றிய தோழருக்கு நன்றியோடு எங்கள் பதிலை ஆரம்பிக்கிறோம்.

தரவுகள் பல்லிளிக்கிறது என்கிறார். 60 ஆண்டுகள் என்று குறிப்பிட்டது சுயமரியாதை(?) கழகங்கள் ஆட்சியில் இருந்த கணக்கு. நாங்கள் வேண்டுமென்றே (எத்தனை வருடம் )ஆட்சியில் இருந்தனர் என்பதை குறிப்பிடாமல் விட்டுவிட்டோம். ஏனென்றால் அவர்கள் ஆட்சியில் இருந்தாலும் இல்லையென்றாலும் அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் கொள்ளையடித்தலும்,பங்கு போட்டுக்கொள்ளுதலும் ஆகும்.

கடைசியாக தமிழ்நாட்டின் நலனுக்காக இருந்த ஆட்சி என்பது காமராஜர் காலம் மட்டுமே என்பது உலகு அறிந்தது. இன்னும் தமிழ்நாடு கொஞ்சமாவது வளர்ச்சி நடையில் பயணிக்கிறது என்றால் இந்த மக்களின் அயராத உழைப்பும், நாளை எல்லாம் மாறிவிடும் என்ற நம்பிக்கை மட்டுமே.

திராவிடஸ்தான் என்ற குரலை எழுப்பியது இவர்கள் தலைவர் என்பதை வசதியாக மறந்துவிட்டார் போலிருக்கிறது.திராவிட நாட்டை தனி நாடாக்க வேண்டும் என்பது ஜஸ்டிஸ் கட்சி மகா நாடு சென்னையில் கூடியபோது ஈ.வெ .ரா பேசியிருக்கிறார். அதுமட்டுமின்றி சென்னையில் நடந்த முஸ்லீம் லீக் பொதுக்குழு கூட்டத்துக்கு வந்த முகமது அலி ஜின்னா வரவேற்று பேசிய ஈ.வெ.ரா. 'பாகிஸ்தான், கட்டாயம் உருவாக வேண்டும் என்ற உங்கள் கோரிக்கையை முழுதுமாக ஏற்கிறேன். தயவு செய்து என் கோரிக்கையையும் ஏற்று கொள்ளுங்கள். இந்துஸ்தான், பாகிஸ்தான், திராவிடஸ்தான் என மூன்றாக இந்தியா பிரிக்கப்பட வேண்டும்,' என்றார்.

இவரது கொள்கையை எதிர்த்து பலரும் திராவிடஸ்தான் கிளர்ச்சி வெறும் கனவு' என்று கூறியதை மறுத்து, 'கனவு காண்பது யார் என்பதைக் காலம் காட்டட்டும்' என்று அண்ணாத்துரை பொங்கியதும் கவனமாக மறந்துவிட்டனர்.

இவர்களின் திராவிட நாடு எனும் கொள்கைகூட காலப்போக்கில் "இங்கு மீன்கள் விற்கப்படும்" என்பது போல் தேய்ந்து இப்பொழுது வெறும் கூச்சல்களில் வந்து நிற்கிறது என்பது நகைப்புக்குரியது.

அவர் நாயக்கர் என்ற பெயரை ஏன் துறந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். பெயரில் இருந்து நீக்கினாலும் அவர் மனதில் என்றும் சாதியம் இருந்தது என்பதை கீழ்வெண்மணி சம்பவத்தில் பார்த்தோம்தானே .

மனதில் இருந்து நீக்கினார்களா என்றால் இல்லை என்பது தான் உண்மை. 'கண்ணப்பர் தெலுங்கர், நான் கன்னடியன், அண்ணாதுரை தமிழர்' (பெரியார் ஈவேரா சிந்தனைகள் - முதல் தொகுதி) என்றும், 'நான் கர்நாடக பலிஜவார் வகுப்பைச் சேர்ந்தவன்' (குடியரசு 22/8/1926) என்றும் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கிறார்."

'ஈ.வெ.ராமசாமி நாயக்கரின் மறுபக்கம்' என்ற நூலை படிக்கவும். எங்கே இவர்களுக்கு படிப்பதெல்லாம் கசக்கும் எங்காவது அரையணா அறிஞர் எவராவது சொன்னால் அதை பிடித்து தொங்கவேண்டியது.

தனது தொண்டர்களுக்கே தாங்கள் எந்த இயக்கத்தில் இருக்கிறோம் என்று விழி பிதுங்கியதால் ஐயா "நான் சுயமரியாதை இயக்கம் தொடங்கினேன் அல்லவா " அதாவது கவனிக்க வேண்டும் அவரின் சுயமரியாதையை காப்பாற்றிக்கொள்ள ஆரம்பித்த கட்சி.

சாவர்க்கர் வரலாறு எல்லாம் தோழர் படிக்கவில்லை என்று தெரிகிறது. சுதந்திரத்திற்காக போராடியவர். பின்னால் அவர் பேதலித்து வேறுவிதமாக நடந்துகொண்டார். ஆனால் வெள்ளையன் காலில் விழுந்து அவர்கள் ஆட்சியே போதும் என்று கூறியவர்களுக்கெல்லாம் தாங்களாகவே தங்கள் கட்சியின் பெயரை அழைத்துக்கொண்டால் மற்றவருக்கெல்லாம் தெரியும் -அப்படித்தானே !

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது என்னவோ இவர்கள் தான் முதன்முதலில் கொண்டுவந்ததுபோல் குதிக்கிறார்கள். 1916 ஆம் ஆண்டு பிராமணரல்லாதோர் நலன் காக்க சர்.பி. தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர் ஆகியோர் 'தென்னிந்தியர் சுதந்திர சங்கம்' தொடங்கினர் .இந்த சங்கமே பின்னாளில் நீதிக்கட்சியாக மாறியது .

1917 இல் இந்தியா வந்த தூதுக்குழுவை சென்னை மாகாணத்தைச் சேர்ந்த 54 அமைப்புகள் சந்தித்து பிராமணரல்லாதோர் மற்றும் சிறுபான்மை மதத்தினருக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்று நீதிக்கட்சியினர் கோரினர்.

காங்கிரஸ் கட்சியில் அப்போது இருந்து வந்த பிராமண ஆதிக்கத்தினால் . மற்ற இனத்தவருக்கும் பங்கு வேண்டும் என சண்டை போட்டு வெளியே வந்தார் ஈ. வெ .ரா.

1951 ஆம் ஆண்டு தமிழக காங்கிரஸ் தலைவராக இருந்த , காமராஜ், பிரதமர் ஜவஹர்லால் நேரு, இந்திய அரசமைப்புச் சட்ட சிற்பி டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் ஆகியோர் முயற்சியால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நீடிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தப்பட்டது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதல் திருத்தம் ஆகும். இதன்மூலம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மீண்டும் இடஒதுக்கீடு பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. வரலாறு முக்கியம் அமைச்சரே.

ஈ.வே.ராமசாமி 1920, 1921, 1922, 1923, 1924, 1925 - ஆகிய ஆண்டுகளில் வகுப்புரிமைத் தீர்மானங்கள் கொண்டுவந்தபோது காங்கிரஸ் அதை ஆதரிக்க மறுத்தது. 1925-ம் ஆண்டு இனி காங்கிரஸை ஒழிப்பதே என் வேலை என்று அதிலிருந்து வெளியேறினார் என்று சொல்லப்படுகிறது. ஏன்1920 லிருந்து -1924 வரை இந்த தீர்மானங்களை ஆதரிக்கவில்லை என்று ஏன் விலகவில்லை?

நாங்கள் சுயம் மரியாதை இயக்கத்தை விமர்சனம் செய்கிறோம் . அதற்கு எதிர்வினையாற்றாமல் ஏன் ராஜாஜி காங்கிரஸ் விட்டு வெளியே வந்தார் என்று தெரியுமா என்று கேட்கிறீர்கள் ? இதற்கும் சுயமரியாதை இயக்கத்திற்கும் என்ன சம்பந்தம் . எதையாவது எதிர்வினை என்ற பெயரில் எழுதிவிடுவது. கழக கண்மணிகள் போன்று அனைவரும் படிக்காமல் விட்டுவிடுவார்கள் என்று நினைக்கவேண்டாம்

கடவுள் மறுப்பு, நாத்திகம் அதாவது குறிப்பாக இந்து கடவுள்கள் மட்டும் என்று ஒரு குழப்படியான கொள்கைகளேயே கொண்டிருந்தார். அவருக்கு தோன்றுவது போல் தனது கொள்கையை மாற்றிக்கொண்டே செல்வது மட்டுமே அவருக்கு தெரிந்தது.

"நாங்கள் கடவுள் இல்லையென்று சொல்லுபவர்கள் அல்லர். கடவுளை நம்பவேண்டாம் என்று சொல்லவும் மாடடோம். அன்பான கடவுள், கருணையுள்ள கடவுள், ஒழுக்கமுள்ள கடவுள் நான் வேண்டாமென்று சொல்லவில்லை'' - (விடுதலை 10-09-1956)

"கடவுளைக் கும்பிடவேண்டாம் என்று கூறவில்லை. கடவுள் இல்லை என்று சொல்லவரவில்லை. யோக்கியமான ஒரு கடவுளை கும்பிடுங்கள், வேண்டாம் என்று கூறவில்லை." - (விடுதலை 04-06-1959)

மூடநம்பிக்கை ஒழிப்பு என்று பிதற்றுவது எல்லாம் மற்றவர்களுக்குத்தான். கடைசி வரை மஞ்சள் துண்டு அணிந்து கொண்டு வலம்வந்ததை நாம் எப்படி மறப்பது? 100 வருடமாக இயங்கும் இயக்கத்தை கேள்வி கேட்கும்போது பொங்கினால் , ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக தங்கள் மூதாதையர் குல வழக்கத்தை பின்பற்றும்போது ( அதில் மூட நம்பிக்கைகள் ஒரு காலத்தில் இருந்தது . ஆனால் காலப்போக்கில் நிறைய மாற்றம் வந்துவிட்டது அல்லவா? இதற்கும் நாங்கள் தான் காரணம் என்று சொல்வார்கள் ) மூடநம்பிக்கை என்று சொன்னால் எப்படி எதிர்வினையாற்றாமல் இருப்பது?

"நேர்மையான தலைவர்கள் பட்டியல் ஏராளம்" - எங்கே அந்த பட்டியலை குறிப்பாக பதவியில் இருந்த திராவிட தலைவர்களின் பட்டியலை அளிக்க முடியுமா. " யார் சார் நீங்க ? எனக்கே பார்க்கணும் போல இருக்கு"

அண்ணாத்துரையின் ஆட்சிக்காலத்திற்கு பிறகு ஆட்சிக்கு வந்த உடன்பிறப்புகளின் ஊழல் வரலாறு எல்லாம் மிகவும் சாமர்த்தியமாக தவிர்த்திருக்கிறார். தேனை எடுத்தவன் புறங்கையை நக்குவதில்லையா என்று கேட்டவராச்சே! எந்த ஊழலும் செய்யாமல் எப்படி இவ்வளவு பணம் சுயம் அறியா இயக்க தலைவர்களிடம் வந்தது என்று சொல்ல முடியுமா ? இல்லை அவர்கள் பாடுபட்டு உழைத்து சம்பாதித்து சேர்த்த சொத்துதான் என்று நிறுவ முடியுமா ?

இவர்கள் தொடர்ந்து செய்யும் மகா - மெகா புரட்டுகளில் ஒன்று எங்கள் கட்சி 'பறையன் கட்சி' என்றுதான் அழைக்கப்பட்டது. பின்னர் சுயமரியாதை இயக்கம் என மாறியது என்று கூசாமல் போய் சொல்வார்கள் .

ஒரு பொய்யை திரும்ப திரும்ப சொன்னால் ,உண்மை என்றும் ஆகிவிடாது . ஈ.வெ .ரா வின் ஜாதி வெறிக்கு ஆதாயம் எவ்வளவோ இருக்கிறது. அவரே நேர்மையாக எல்லாவற்றையும் எழுதிவிட்டு சென்றிருக்கிறார்.

" என்போன்ற 'சூத்திரன்' என்று சொல்லப்படுபவன் 'பறையன்' என்று சொல்லப்படுவோருக்கு உழைப்பதாகச் சொல்லுவதெல்லாம், 'சூத்திரர்கள்' என்று தம்மை யாரும் கருதக்கூடாது என்பதற்காகத் தானேயல்லாமல் வேறில்லை. ஆகையால், எனக்காக நான் பாடுபடுவதென்பது உங்கள் கண்ணுக்கு உங்களுக்காகப் பாடுபடுவதாய்த் தோன்றுகிறது." (குடியரசு 25.4.1926)

"தீண்டாமை விலக்கு என்னும் விஷயத்தில் நான் ஏதாவது ஒரு சிறிதாகிலும் வேலை செய்திருப்பதாக ஏற்படுமானால் அது எங்கள் நலத்திற்குச் செய்ததாகுமே ஒழிய, உங்கள் நலத்திற்கென்று செய்ததாக மாட்டாது. " (குடியரசு 16-6-1929)

"திராவிடர் கழகம்' என்பது, 4வது வருணத்தாராக ஆக்கப்பட்டு சமுதாயத்தில் இழிவுபடுத்தப்பட்டு, சரீரம் பாடுபட வேண்டியதாகக் கட்டாயப்படுத்தித் தாழ்த்தப்பட்டு வைத்திருக்கும் கோடி மக்கள் சமுதாயத்தின் விடுதலைக் கழகம் என்றுதான் சொல்ல வேண்டும்." (குடியரசு 6-7-1946)

இவ்வாறு ஈவேரா தான் சூத்திரன் என்று சொல்லப்படுபவர்களுக்காகத்தான் பாடுபடுகிறேன் என்று தெள்ளத்தெளிவாக கூறியபோதும் திராவிட இயக்க எழுத்தாளர்கள் முதல் சில இன்று கண்டம் விட்டு கண்டம் தாண்டிய அறிஞர்களும் அவர் தலித்துகளுக்காக பாடுபட்டார் என்பதுபோல இல்லாத ஒரு பொய் பிம்பத்தைக் கட்டமைத்து வருவது தான் வேதனை.

1954-களில் ஈ.வெ .ராவால் தொடங்கப்பட்ட திராவிடர் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தினை நாகை மாவட்டத்தில் மிகப்பெரும் இயக்கமாக வளர்த்தெடுத்த தோழர்கள் பாவா நவநீத கிருஷ்ணன் மற்றும் ஏ.ஜி.கஸ்தூரிரெங்கன் ஆகிய இருவரும் தந்தை பெரியாரிடம் உண்டான கருத்து வேறுபாட்டால் இயக்கத்திலிருந்து விலகுகின்றனர். அதில் தோழர் ஏ.ஜி.கஸ்தூரிரெங்கன், மிகப் பெரும்பாலான திராவிடர் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத் தோழர்களோடு பொதுஉடைமை இயக்கத்தின் தமிழ்நாடு விவசாயச் சங்கத்தின் செங்கொடி அமைப்பில் இணைகின்றார். இந்த செங்கொடி அமைப்பின் தொடர்ச்சியான போராட்டங்களால் கோபமுற்ற பண்ணையார்கள் 'விவசாயத் தொழிலாளர்கள் அனைவரும் நெல் உற்பத்தியாளர் சங்கத்தில் சேர்ந்துவிட வேண்டும்' என்று உத்தரவிட்டனர். பின்னர் அதற்கு யாரும் செவி சாய்க்காததால் ஏற்பட்ட ஆத்திரத்தினால் 44 அப்பாவி மனித உயிரிகளை எரித்தே கொன்றனர். இந்த போராட்டங்களை நடத்தியவர்கள் இடதுசாரிகள். இப்பொழுது புது கதையாக திராவிடர் விவசாயத் தொழிலாளர்கள் தான் நடத்தினார்கள் என்று வரலாற்றை மாற்றி எழுத பார்க்கிறார்கள்.

இவர்கள் தலைவர் தான் முதன்முதலில் ஹிந்தி எதிர்ப்புக்காக போராடினார் என்று வரலாற்றை திரித்து எழுதுவார்கள். நடந்தது என்ன? 1938ஆம் ஆண்டு இராசாசி அரசின் பள்ளிகளில் கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து காவியுடை தரித்த சிவானந்த அடிகள், அருணகிரி அடிகள், சண்முகானந்த அடிகள் எனும் மூன்று சாமியார்கள் .இந்த நிலையில் இந்தி எதிர்ப்பைத் தோற்றுவித்த நானும் மற்ற இரு துறவிகளான அருணகிரி அடிகளும், சண்முகானந்த அடிகளும் சிறை சென்றுவிடவே, படிப்படியாக இந்தி எதிர்ப்பு அறப்போரைப் ஈ.வெ.இராமசாமி அவர்களே ஏற்று நடத்தும் நிலை உருவாகியது. இந்த எதிர்ப்பு போராட்டங்கள் பற்றி ஈ.வெ.ரா என்ன சொல்கிறார் "நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, காங்கிரசு மந்திரிகளுக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்பதற்காக நான் அது போல் பயன் படுத்திக் கொண்டேனே யொழிய, உண்மையிலேயே எனக்கு இந்தி கட்டாயமாக்கப் படுவதைப் பற்றியோ, அதனால் தமிழ் அழிந்து விடும் என்பது பற்றியோ கவலையில்லை". பெரியாரின் இந்தி எதிர்ப்பைத் தோலுரிக்கும் ஈழத்தடிகள் எழுதிய "இந்தி எதிர்ப்பு் அன்றும்-இன்றும் " நூல் அனைவரும் படிக்க வேண்டிய நூலாகும்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# பிரிவினைவாதிகளா திராவிட கட்சிகள்?

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

*1965*ல் ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தின் போது துப்பாக்கி சூடு ஏன் நடந்தது? ஜனவரி *25, 1965* அன்று துக்க தின அனுசரிப்பு நிகழ்வுகளில் ஒரு பகுதியாக மதுரை திலகர் திடலில் இந்தியை ஒற்றை ஆட்சி மொழியாக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 17ஐ எரிக்க முடிவு செய்யப்பட்டிருந்தது. அப்போது நடைபெற்ற ஊர்வலத்தில் போராட்டக்காரர்களுக்கும் காங்கிரஸ் கட்சியினருக்கும் இடையே கைகலப்பு மூண்டது. இந்த மோதலில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்ட இளைஞர்கள் சிலர் காயமடைகின்றனர்.

குடியரசு நாள் கொண்டாட காங்கிரஸ்காரர்கள் செய்துவைத்திருந்த அலங்காரங்களுக்கு தீ வைக்கப்படுகிறது. இந்தி எதிர்ப்புப் போராளிகள் மீதான தாக்குதல் பற்றிய செய்தி மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும் பரவுகிறது. மிகப்பெரும் கலவரம் ஏற்படுகிறது.

மத்திய அரசு அலுவலகங்களுக்கு தீவைத்தல், பொது சொத்துக்களை சூறையாடுதல் தொடர்ந்து நிலைமை கட்டுக்கொள்ளாமல் சென்றதால் ராணுவம் வருகிறது. கலவரத்தை அடக்க துப்பாக்கி சூடு நடத்தியதில் நூற்றுக்கணக்கவர்கள் இறந்தனர். (ஒரு காலத்தில் ஹிந்திக்கு எதிராக போராடிய இயக்கம், தனது சொந்தங்களில் ஒருவருக்கு மத்திய அமைச்சர் பதவி வழங்கி அதற்கான காரணம் அவர் நன்றாக ஹிந்தி பேசுவார் என்று கூறியதை மறக்க முடியுமா?) கக்கனின் நேர்மை நமக்கு தெரியும் .கண்டிப்பாக அவர் வருத்தம் தெரிவிக்கவில்லை என்று நிரூபிக்க முடியுமா ? (இந்த கேள்விக்கும் சுயமரியாதை இயக்க பற்றிய கட்டுரைக்கும் சம்பந்தம் இல்லையெனினும், தோழர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. அவரைப் போன்று சாதுர்யமாக கேள்விகளை தவிர்க்க எங்களுக்கு தெரியாது )

பெண் விடுதலை, பெண்கள் முன்னேற்றத்திற்காக ஈ.வெ.ரா அல்லும் பகலும் அயராது உழைத்தார் என்று வாய் கூசாமல் புளுகுவார்கள். அவரால் தான் தமிழ்நாட்டில் பெண்களுக்கு சுதந்திரம் கிடைத்திருக்கிறது. அதற்கு முன்பு எல்லாரும் அடிமையாக இருந்தனர். அதாவது தமிழ்நாடு மட்டுமல்ல அண்டை மாநிலங்களாகிய கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகவிலெல்லாம் இவரின் கருத்துக்களை மொழி பெயர்த்து அங்குள்ள பெண்களுக்கு வழங்கியதால் அவர்களுக்கு சுதந்திரம் கிடைத்தது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும் தானே. பெண்களுக்கு கல்வி சுதந்திரம் கிடைத்ததினால் ஏற்பட்ட பொருளாதார சுதந்திரத்தினால் காலப்போக்கில் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகளை அவர்களே எடுத்துக்கொண்டார்கள். கண்டிப்பாக அரசாங்கத்தின் சில சட்டங்கள் உதவி புரிந்தன என்பதை மறுக்க முடியாது. பல ஆண்டுகளில் தானாக நடந்த மாற்றத்தின் பலனை தங்களால் தான் நடந்தது என்று சொல்வார்கள். காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதை தான். சாதி வெறி இன்னும் ஒழியவில்லை என்றால் அதற்கு வர்ணாசிரமம் காரணம் என்பார்கள். பார்ப்பனீயம் என்பார்கள். . நல்லது நடந்தால் எங்களால் தான் என்றும், 100 ஆண்டுகளாக மாறாமல் இருக்கிறதே என்று கேட்டால் மனுஸ்ருமிதி தான் காரணம் என்பார்கள்.

“பெண்களுக்கு நேரம் மீதியாக வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?. தலைமயிரை வெட்டிவிட்டால் அதிகநேரம் மீதியாகும். பெண்கள் கைக்கு ஓய்வு கொடுக்கவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?. அவர்களுக்கு ஒரு குப்பாயம் (மேல்சட்டை) போட்டுவிட்டால் கைக்கு ஓய்வுகிடைத்துவிடும். (இல்லாவிட்டால் அடிக்கடி மார்பு சீலையை இழுத்துப் போடுவதே வேலையாகும்) “ - குடியரசு’ (16-11-30). இந்த பதிலில் பெண்ணுரிமை, பெண் சுதந்திரம் போன்ற புரட்சி எங்கே இருக்கிறது.

“கோவிலுக்கு போக மாட்டேன் என்று சொன்ன 14 வயது மகளை கன்னத்தில் அறைந்தார் பாரதி” என்று கட்டுரையாளர் சொல்கிறார். . அவர் கழக கண்மணிகளின் புத்தகமான வாலாசா வல்லவன் எழுதிய ‘திராவிட இயக்கப் பார்வையில் பாரதியார்’ என்ற புத்தகத்தில் குறிப்பிட்ட சம்பவத்தை குறிப்பிடுகிறார். அவர்கள் குறிப்பிடும் இந்த சம்பவத்திற்கு ஆதாரமாக “மேற்படி நூல், ப.140.”என்று குறிப்பிடுகிறார். இணையம் முழுவதும் தேடிவிட்டேன். அந்த மேற்படி நூல் என்னவென்று தெரியவில்லை. இதற்கான ஆதாரம் இருக்கிறதா ? பாரதியின் பற்றிய எந்த சுயசரிதையிலும் என்னால் கண்டுபிடிக்கவில்லை. இன்னொரு பதிவோ, பாரதியார் இப்படி செய்ததற்கு காரணம் பெண் குழந்தைகளை அச்சமின்றி, சுதந்திரமாக உலவ விட வேண்டும் என்ற பாரதியாரின் புரட்சிகரமான எண்ணத்தை வெளிப்படுத்தவே இவ்வாறு செய்தார் என்கிறது. ஆதாரம் இல்லாதவரை இது போலி குற்றச்சாட்டு என்றே சொல்ல முடியும்.

கனிமொழி பாராளுமன்ற உறுப்பினர் தானே. ? முதலமைச்சர் இல்லையே. நீங்கள் பெண்ணுரிமை பேணுகிறவர் என்றால் உங்கள் கழகத்திலுருந்து யாரவது ஒருவர் நாளை முதல்வராக வாய்ப்பிருக்கிறதா ?

காய்ச்சல் வந்தால் சில நாட்களில் சரியாகிவிடும். போலி பகுத்தறிவு என்பது புற்றுநோய் போன்றது. அது ஒரு குறிப்பிட்ட சமூகத்தை மட்டுமே குறை சொல்லும். ஹிட்லர் எவ்வாறு ஜெர்மனியின் அழிவிற்கு காரணம் யூத மக்கள் தான் என்று கொன்று குவித்தானோ, அது போன்று தமிழ்நாட்டின் எல்லா சீர்கேடுகளுக்கு காரணம் பார்ப்பனீயம் என்று பொய்வேஷம் போட்டுவருகின்றனர். எளிய மக்களை எல்லா நாளும் ஏமாற்ற முடியாது.

பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் வளர்ந்துள்ளது என்பதை தமிழ்நாட்டை பீஹாருடன் ஒப்பிடக்கூடாது. ஏன் கேரளா, கர்நாடகம் மற்றும் குஜராத் மாநிலங்களுடன் ஒப்பிடலாமே? சென்னை நீங்கலாக மற்ற பகுதிகளில் சரிசமமாக வளர்ந்திருக்கிறது என்று சொல்ல முடியுமா ? அப்படியே தமிழ்நாட்டில் பாலாறும், தேனாறும் ஓடுகிறதென்றால், அந்த பொன்னாட்டினை விட்டுவிட்டு கண்டம் விட்டு கண்டம் வந்து ஏன் தோழர் வாழ்கிறார் என்று தெரியவில்லை ( இது விதண்டாவாதம் தான். அவர்களை அவர்கள் வழியில் தான் கேள்வி கேட்கவேண்டும் ? ) .

“எல்லா மக்களுக்குமான inclusive “அரசியல் என்னவென்று விளக்க முடியுமா ? உங்கள் கூட்டணியில் இருக்கிற விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு பொதுத்தொகுதிகள் ஒதுக்குவீர்களா? இல்லை சாதிக்கட்சிகளுக்கு நாங்கள் எதிரி சமூகநீதி தான் எங்கள் நோக்கம் என்று தொகுதியில் பெருவாரியாக இல்லாத சமூகத்திலிருந்து ஒரு பிரதிநிதியை வேட்பாராளராக அறிவிக்க முடியுமா?. பெண்களுக்கு 50 சதவிகிதம் வாய்ப்பு அளிக்க முடியுமா? சீமானால் முடிந்ததை உங்களால் செய்ய முடியுமா ?.

சங்கிகள் கோவேல்கரை தங்கள் அறிவுச்சுரங்கம் என்றும் அவரால் தான் இந்தியா முன்னேற்ற பாதையில் பீடுநடை போடுகிறது என்றும் தொடர்ந்து பொய்களை பரப்பி நிறுவ முயல்கின்றனர். அதற்கு கொஞ்சமும் குறைவில்லாதது சுயமரியாதை இயக்கத்தினரின் ஈ .வெ .ரா பற்றிய புரட்டுகளும், பொய்மை கருத்துக்களும். நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே - இன்னும் 1000 ஆண்டுகள் நஞ்சுகளை பரப்பினாலும் ஒரு கலகக்குரல் உங்களை கேள்வியே எழுப்பவே செய்யும். மாற்றுக்கருத்துக்களை மதிக்க கற்றுக்கொள்ளுங்கள். நிறைய வாசியுங்கள். (குறிப்பாக குடிஅரசு ,விடுதலை இதழ்களை நன்றாக வாசிக்கவும்).





# யாரிந்த மலையகத் தியாகிகள்...?

● எஸ்.பிரதா

மலையகத் தியாகிகள் தினம் வருடாந்தம் ஜனவரி 10ஆம் திகதி மிகவும் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டுவருகின்றது. அந்தவகையில் இவ்வருடத்திலும் நினைவேந்தல் நிகழ்வு எழுச்சியுடன் நடைபெற்றது.

மலையகத்தில் இம்முறை ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் நினைவேந்தல்இடம்பெற்றுள்ளமையானது மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது. அதேபோல மலையகத்துக்கு வெளியில் யாழ். மண்ணிலும் நினைவேந்தல் நிகழ்வு நடந்துள்ளது.

மலையகத்தில் பிடிதளராதே அமைப்பின் ஏற்பாட்டில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு கொட்டகலையிலும், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலும் நடத்தப்பட்டது.

### மலையகத் தியாகிகள் தினம் என்றால் என்ன?

மலையகத் தமிழர்களின் தொழில்சார் உரிமை, மொழி உரிமை, பொருளாதார உரிமை உட்பட உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த மலையகத் தியாகிகளை பொதுவானதொரு தினத்தில் - பொதுக் கட்டமைப்பின்கீழ் நினைவுகூருவதற்குரிய ஏற்பாடு இருக்கவில்லை.

நினைவேந்தல் நடத்தப்பட்டாலும் அது வெவ்வேறு காலப்பகுதியல் - தமது வசதிக்கேற்பவே கட்சி, தொழிற்சங்கம் மற்றும் அமைப்புகளால் நடத்தப்பட்டுவந்தன.

இந்நிலையில் 2018 டிசம்பர் 15 ஆம் திகதி மலையக உரிமைக்குரல் மற்றும் பிடிதளராதே ஆகிய அமைப்புகள் இணைந்து தலவாக்கலை, டேவோன் தோட்டத்திலுள்ள மலையகத் தியாகி சிவனு லெட்சுமணனின் கல்லறையில் அவருக்குரிய நினைவேந்தல் நிகழ்வை நடத்தின.

இதன்போது மலையக மக்களுக்கான உரிமை போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளை வருடாந்தம் ஜனவரி 10ஆம் திகதி நினைவுகூரவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதேபோல மலையக உரிமைக்குரலும், பிடிதளராதே அமைப்பும் இணைந்து பிடிதளராதே என்ற ஓர் அமைப்பாக இணைந்து இயங்குவதற்கும் தீர்மானித்தன.


இதற்கமைய 2019 ஜனவரி 10 ஆம் திகதி மஸ்கெலியாவில் மலையக தியாகிகள் தினம் நடத்தப்பட்டது.

### ஜனவரி 10 திகதி நிர்ணயத்துக்குரிய காரணம் என்ன?

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுப் போராட்டம், 1939 டிசம்பர் பிற்பகுதியில் ஆரம்பமானது. 1940 ஜனவரியிலும் அந்தப்போராட்டம் தொடர்ந்தது.

தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்குவதற்கு இணக்கம் எட்டப்பட்டிருந்தாலும் , 1940 ஜனவரி 10 ஆம் திகதி பொலிஸ் அதிகாரிகள் குழு, தோட்டத்துக்குள் புகுந்து










அடாவடியில் ஈடுபட்டடது.

அப்போது தோட்டத்தல் இருந்த மக்களை காப்பதற்காக மலையில் இருந்து தோட்டத்தை நோக்கி கோவிந்தன் என்பவர் ஓடி வந்தார். அவர் ஆயுதம் கொண்டுவருகின்றார் எனக் கருதி, அவர்மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அன்றுதான் மலையகத் தியாகிகள் வரலாறும் ஆரம்பமாகியது.

முல்லோயா கோவிந்தனின் மரணம் இலங்கையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருந்தது.

மலையகத் தியாகிகள் வரலாறு முல்லோயா கோவிந்தனின் வீர மரணத்துடன் ஆரம்பமாகியதால்தான், மலையகத் தியாகிகள் தினத்தை ஜனவரி 10 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமையவே தற்போது இலங்கையில் ஜனவரி 10 ஆம் திகதி மலையக தியாகிகள் தினமாக நினைகூரப்பட்டுவருகின்றது. மலையகத்தை மையப்படுத்தி இயங்கும் அத்தனை அமைப்புகளும் ஒரே நாளில் தியாகிகள் தினத்தை நடத்துகின்றன.

மலையகத் தியாகிகள் தினத்தை நடத்துவதால் ஆரம்ப காலகட்டத்தில் பிடிதளராதே அமைப்பினருக்கு எதிராக பொலிஸ் அராஜகம் கட்டவிழ்த்துவிடப்பட்டது. அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் சி.ஐ.டி.யினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, உள ரீதியிலான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. எனினும், பிடிதளராதே அமைப்பினர் தமது சமூகம்மீது பற்றுகொண்டிருந்ததாலும், தவறான வழியில் பயணிக்காததாலும் அச்சுறுத்தலுக்கு அடிபணியவில்லை. அதனால்தான் இன்று அனைவராலும் மலையக தியாகிகள் தினத்தை சுதந்திரமாக நினைவுக்கூரக்கூடியதாக உள்ளது.

அதேவேளை, மலையக உரிமைக்குரல் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும், பிடிதளராதே அமைப்பின் தற்போதைய நிறைவேற்று குழு உறுப்பினருமான ஊடகவியலாளர் இராமசந்திரன் சனத்தின் முயற்சியால், மலையகத் தியாகிகள் தினத்துக்கு அரசாங்க அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்குரிய முயற்சி இடம்பெற்றது.

இது தொடர்பில் வேலுகுமார் எம்.பி.யால் நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புப் பிரேரணையொன்று கொண்டுவரப்பட்டது. இதில் உரையாற்றிய ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டனர். எனவே, மலையகத் தியாகிகள் தினத்தை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும், மலையகத் தியாகிகளுக்கு நிரந்தர நினைவு தூபியொன்று அமைக்கப்பட வேண்டும் என்பது பிடிதளராதே அமைப்பு தோழர்களின் கோரிக்கையாக உள்ளது.

மலையகத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள் சிலர் தொடர்பான தகவல்கள் மட்டுமே உள்ளன. மேலும் பல தியாகிகள் வாழ்ந்திருந்தாலும் அவர்கள் பற்றிய துல்லியமான தகவல்கள் இல்லை.

மலையகத் தியாகிகளில் ராமசாமி வீராசாமி, ஐயன் பெருமாள் வேலாயுதம் ஆகிய இருவரும் முக்கியமானவர்கள்.

கண்டி மாவட்டம், புசல்லாவை - கந்தலா தோட்டத்தை சேர்ந்த இவர்கள், தோட்ட நிர்வாகத்தின் அடக்குமுறைக்கு எதிராக. தோட்டத்துரையை வெட்டிக்கொலை செய்தார்கள்.

இது தொடர்பான வழக்கில் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்ட பின்னர் இருவரும் 1942 பெப்ரவரி மாதம் தூக்கிலிடப்பட்டனர்.

அதேபோல பெருந்தோட்ட மக்களின் காணி சுவீகரிப்புக்கு எதிரான போராட்டத்தின்போது சுடப்பட்டு இளம் வயதிலேயே உயிரிழந்தவர்தான் மலையகத் தியாகி சிவனு லெட்சுமணன். இவர் 1977 மே 11 ஆம் திகதி உயிர்த் தியாகம் செய்தார்.

மலையகத் தியாகிகள் தினம் என்பது ஒரு சாதாரண நினைவு நாள் அல்ல. அது, உரிமைகளுக்காக எழுந்த குரல்களின், அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களின், உழைப்பால் நாட்டை கட்டியெழுப்பிய மக்களின் உயிர்த் தியாகங்களை நினைவுகூரும் நாளாகும்.

இலங்கையின் பொருளாதார முதுகெலும்பாக விளங்கிய மலையக தமிழ் மக்கள், தங்கள் வியர்வையும் ரத்தத்தையும் சிந்தி உருவாக்கிய நாட்டில், உரிமைகளற்றவர்களாக நீண்ட காலம் வாழ்ந்துவருகின்றனர். எனவே, அவர்களுக்குரிய அரசியல், பொருளாதார மற்றும் சமூக விடுதலை விரைவில் கிட்டவேண்டும். ■


TCECA
Tamil Community Empowerment Council Australia Inc
வழங்கும்
JMSOLAR SOLUTIONS
L&R Global Appliances
இவர்களின் ஆதரவில்
இசைப்பிரியனின்
இசைச் சங்கமம்
தாயக மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக, தாயகத்தின் புகழ் பூத்த இசையமைபாளர் இசைப்பிரியன் மற்றும்
பிரபல தாள வாத்தியக் கலைஞர் பானுதீபனுடன் மெல்பேர்ண் கலைஞர்கள் இணைந்து படைக்கவிருக்கும் மாபெரும் இசைச் சங்கமம்.
SATURDAY, 07TH OF FEBRUARY 2026 @ 6PM
Rowville Performing Arts Centre
Rowville Secondary College
Humphreys Way, Rowville Victoria 3178
For tickets and information contact:
0404 354 811 | 0450 662 990 | 0433 002 619 | 0406 429 107


VICTORIA
தமிழ் மரபுத் திங்கள்
தமிழர் திருநாள்
Tamil Festival Australia
தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா 2026
25 JANUARY 2026 | ஞாயிற்றுக்கிழமை
காலை 9:00 மணியிலிருந்து
Event Central at Caribbean Park,
850 Stud Road, Scoresby, VIC 3179
Access via Gate 20 on Stud Road
ஊர் கூடிப் பொங்கல்
பாரம்பரிய விளையாட்டுகள்
கலை கலாசார நிகழ்வுகள்
அங்காடிகள்
சிறுவர் சவாரிகள்/களிப்பூட்டும் நிகழ்வுகள்
கண்காட்சிகள் / பங்கேற்புச் செயல்பாடுகள்
மாபெரும் இசை நிகழ்ச்சி
FREE ENTRY
அனுமதி இலவசம்
FREE ENTRY
விக்டோரியா வாழ் தமிழர்களின்
மாபெரும் தைப்பொங்கல் திருவிழா!
அனைவருக்குமான ஒரு திருவிழா
விக்டோரியா வாழ் தமிழர்கள் மற்றும் பல தமிழ் சமூக அமைப்புகள் இணைந்து
கொண்டாடும் மாபெரும் தைப்பொங்கல் விழா!
Australian Tamil Chamber of Commerce
TAMIL ARTS
www.tamilfestival.org.au
vanakkam@tamilfestival.org.au

# ஆஸ்திரேலியா, இலங்கை மற்றும் உலக நாடுகளில் 2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற முக்கியமான சம்பவங்கள், நிகழ்வுகளின் தொகுப்பு


அமெரிக்காவின் 47-வது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்பு

**ஜனவரி 7 -** திபெத்தில், நேபாள எல்லையையொட்டி ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் 95 பேர் பலி.
**ஜனவரி 9 -** அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஏற்பட்ட காட்டுத்தீயால் பேரழிவு.
**ஜனவரி 13 -** ஜப்பானில் 6.8 ரிக்டர் அளவுகோலில் நிலநடுக்கம்.
**ஜனவரி 20 -** அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்பு.
**ஜனவரி 29 -** சூடானில் ஏற்பட்ட விமான விபத்தில் 29 பேர் உயிரிழப்பு.

**பெப்ரவரி- 01** டொனால்ட் ட்ரம்பின் வரிப் போர் ஆரம்பம்.
**பெப்ரவரி- 05** சுவீடனில் பாடசாலையொன்றுக்குள் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு தாக்குதலில் 10 பேர் பலி.
**பெப்ரவரி- 06** ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கிடையில் 600 கைதிகள் பரிமாற்றம்.
**பெப்ரவரி- 26** தாய்லாந்தில் கல்விச் சுற்றுலா சென்ற பஸ் விபத்து: 26 பேர் பலி.

**மார்ச் - 10** ஈரான் மற்றும் ரஷ்யா படைகள் கூட்டுப் போர் பயிற்சி.
**மார்ச் - 11** பாகிஸ்தானில் ரயிலைக் கடத்திய பயங்கரவாதிகள்: 30 படையினர் சுட்டுக்கொலை
**மார்ச் - 19** சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து பூமிக்கு திரும்பினார் சுனிதா வில்லியம்ஸ்.
**மார்ச் - 28** மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 3,800 க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

**ஏப்ரல் 08-** 12500 ஆண்டுகளுக்கு முன் அழிவடைந்த ஓநாய் இனத்துக்கு புத்துயிர் அளித்த விஞ்ஞானம்.
**ஏப்ரல் - 08 -** பிள்ளையான் கைது.
**ஏப்ரல் - 21 -**போப் பிரான்சிஸ் மறைவு.
**ஏப்ரல் - 28 -**அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்களை இயக்க ஆஸி. கடற்படைக்கு அமெரிக்கா பயிற்சி.
**ஏப்ரல் 29 -** மெல்பேர்ணில் 29 கார்களை சேதப்படுத்திய பெண்.
**ஏப்ரல் 30 -** ஆஸ்திரேலியாவுடன் புதிய வர்த்தக ஒப்பந்தம்: ட்ரம்ப் அறிவிப்பு.

**மே 02 -**காஷ்மீர் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் பலி.
**மே 03 -**ஆஸி. நாடாளுமன்றத் தேர்தலில் லேபர் கட்சி அமோக வெற்றி.
**மே 07-** பாகிஸ்தானிலுள்ள பயங்கரவாதிகளின் இலக்குகளை குறிவைத்து இந்தியா தாக்குதல்.
**மே 08 -** புதிய பாப்பரசர் தெரிவு.
**மே 10 -** இந்தியா, பாகிஸ்தானுக்கிடையில் போர் நிறுத்தம்.
**மே 13 -** லிபரல் கட்சி வரலாற்றில் முதன் முறையாக பெண் தலைமைத்துவம் தேர்வு: எதிர்க்கட்சி தலைவரானார் சூசன் லே.
**மே 13 -** ஆஸ்திரேலிய நாடாளுமன்ற தேர்தலுக்கு பிறகு புதிய அமைச்சரவை பதவியேற்பு.


சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து பூமிக்கு திரும்பினார் சுனிதா வில்லியம்ஸ்

**மே 17 -** உக்ரைனுக்காக போரிட்ட ஆஸி. பிரஜைக்கு ரஷ்யாவில் 13 ஆண்டுகள் சிறை.
**மே 31 -** நைஜீரியாவில் வெள்ளம்: நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு.

**ஜுன் 04 -**ஜேர்மனியில் இரண்டாம் உலகப்போரின்போது வீசப்பட்ட 3 குண்டுகள் வெடிக்காத நிலையில் மீட்பு.
**ஜுன் 12 -** அகமதாபாத்தில் இருந்து லண்டன் புறப்பட்ட எயார் இந்தியா விமானம் விபத்து: 240க்கும் மேற்பட்டோர் பலி
**ஜுன் 13 -** ஈரான்மீது இஸ்ரேல் தாக்குதல், இரு நாடுகளுக்கும் இடையில் மூண்டது போர்.
**ஜுன் 22 -** ஈரானில் உள்ள அணுஆயுதப் பரிசோதனை இடங்கள்மீது அமெரிக்கா தாக்குதல்.
**ஜுன் 23 -** கட்டாரிலுள்ள அமெரிக்க இராணுவத் தளம்மீது ஈரான் தாக்குதல்.
**ஜுன் 24 -** அணையா விளக்கு போராட்டம் ஆரம்பம்.
**ஜுன் - 24 -** ஈரான், இஸ்ரேலுக்கிடையில் போர் நிறுத்தம் அமுல்.
**ஜுன் 27 -** பாலஸ்தீன ஆதரவு போராட்டத்தில் தாக்கப்பட்ட கிறீன்ஸ் உறுப்பினர்.
**ஜுன் 27 -** ஆஸியில் பயங்கரவாத அமைப்பாக பட்டியலிடப்பட்டது 'டெரர்கிராம்".
**ஜுன் 30 -** இலங்கையின் முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே காலமானார்.

**ஜுலை 04 -** இலங்கையில் முன்னாள் அமைச்சர் எஸ்.எம் சந்திரசேன கைது .


போப் பிரான்சிஸ் மறைவு

**ஜுலை 05 -**மெல்பேர்ணில் யூதவழிபாட்டு தலம்மீது தீ வைப்பு தாக்குதல்.
**ஜுலை 05 -**ஆஸ்திரேலிய நடிகரான ஜூலியன் மெக்மஹேன் தனது 56 ஆவது வயதில் காலமானார்.
**ஜுலை 06 -** புதிய கட்சியை ஆரம்பித்தார் எலான் மஸ்க்.
**ஜுலை 08 -** 14 நாடுகள் மீதான தீர்வை வரியை அறிவித்தார் ட்ரம்ப் .
**ஜுலை 12 -**ஆஸி. வெளிவிவகார அமைச்சர் சீனா பயணம்.
**ஜுலை 14 -** தென்னிந்திய சினிமாவின் பழம்பெரும் நடிகை சரோஜா தேவி காலமானார்.
**ஜுலை 19 -** தூங்கும் இளவரசர் என அழைக்கப்பட்ட சவூதி இளவரசர் 20 ஆண்டுகளாக கோமாவில் இருந்த நிலையில் மரணம்.
**ஜுலை 20 -** வியட்நாமில் சுற்றுலாப் படகு கவிழ்ந்ததில் 37 பேர் உயிரிழப்பு.
**ஜுலை 21 -** செம்மணிப் புதைகுழி: சர்வதேச நீதிகோரி கன்பராவில் போராட்டம்.
**ஜுலை 21 -**செம்மணிப் புதைகுழி: சர்வதேச விசாரணைக்கு ஆஸி. கிறீன்ஸ் கட்சி வலியுறுத்து.

**ஓகஸ்ட் 04 -**ஆஸி. பெடரல் பொலிஸ் ஆணையாளராக பெண் அதிகாரி நியமனம்.


இலங்கையில் பேரழிவை ஏற்படுத்திய டித்வா புயல்

**ஓகஸ்ட் 05 -** இலங்கையில் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மாஅதிபர் பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணை நிறைவேற்றம்.
**ஓகஸ்ட் 06 -** ஆஸ்திரேலிய ஆளுநர் நாயகம் இலங்கை வருகை.
**ஓகஸ்ட் 12 -** சபரிமலை ஐயப்பன் யாத்திரையை அங்கீகரிக்கப்பட்ட புனித தலயாத்திரையாக பிரகடனப்படுத்த இலங்கை அமைச்சரவை அனுமதி.


அகமதாபாத்தில் இருந்து லண்டன் புறப்பட்ட எயார்ர் இந்தியா விமானம் விபத்து: 240க்கும் மேற்பட்டோர் பலி

**ஓகஸ்ட் - 13-** இலங்கையின் புதிய பொலிஸ் மாஅதிபராக பிரியந்த வீரசூரிய நியமனம்.
**ஓகஸ்ட் 13 -** சீனாவுக்கு கடிவாளம்: வனுவாட்டு நாட்டுடன் ஆஸ்திரேலியா புதிய ஒப்பந்தம்.
**ஓகஸ்ட் 19 -**பஸ்ஸில் தீ விபத்து: 73 பேர் பலி: ஆப்கானிஸ்தானில் சோகம்.
**ஓகஸ்ட் 20 -** இலங்கையின் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் கைது.
**ஓகஸ்ட் 22 -** இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் கைது.
**ஓகஸ்ட் 25 -**ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற யூத எதிர்ப்பு தாக்குதல்களின் பின்னணியில் ஈரான்: தூதுவர் வெளியேற்றம்.
**ஓகஸ்ட் 26 -** விக்டோரியாவில் இரு பொலிஸ் அதிகாரிகள் சுட்டுக்கொலை.

**செப்ரெம்பர் 01 -**வெளிநாட்டினர் குடியேறுவதை எதிர்த்து ஆஸியில் போராட்டம்: பூர்வகுடி மக்கள்மீதும் தாக்குதல்.
**செப்ரெம்பர் 07 -**ரஷ்யாவில் புற்றுநோய்க்கான தடுப்பூசி சோதனை வெற்றி
**செப்ரெம்பர் 08 -**நச்சுக் காளானை சமைத்துக்கொடுத்து மூவரை கொலை செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட பெண்ணுக்கு விக்டோரியா உச்ச நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனை விதிப்பு.
**செப்ரெம்பர் 12 -** பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதி பொல்சனாரோவுக்கு 27 வருட சிறைத்தண்டனை.
**செப்ரெம்பர் 13 -** பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கும் ஐ.நா. தீர்மானத்துக்கு ஆஸி. உட்பட 142 நாடுகள் ஆதரவு.
**செப்ரெம்பர் 14 -** நேபாளத்தில் 24 அமைச்சர்களுடன் இடைக்கால அரசு உதயம்.
**செப்ரெம்பர் 17 -** மூன்று பொலிஸ் அதிகாரிகள் சுட்டுக்கொலை: அமெரிக்காவில் பயங்கரம்.
**செப்ரெம்பர் 22 -** பாலஸ்தீனத்தை அங்கீகரித்தது ஆஸ்திரேலியா.
**செப்ரெம்பர் 25 -** பாலஸ்தீனக் கொடி பறந்த வாகனத்துக்கு சிட்னியில் தீ வைப்பு
**செப்ரெம்பர் 26 -** தியாக தீபம் திலீபனுக்கு தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் உணர்வுபூர்வமாக நினைவேந்தல் அனுஷ்டிப்பு.
**செப்ரெம்பர் 28 -** தமிழகம் கரூரில் , நடிகர் விஜயின் பிரசாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலி!.
**செப்ரெம்பர் 28 -** அமெரிக்காவில் தேவாலயத்தில் துப்பாக்கிச்சூடு: 4 பேர் பலி: 9 பேர் காயம்.
**செப்ரெம்பர் 29 -**இஸ்ரேல், ஹமாஸ் போர் நிறுத்தம்: 21 அம்ச அமைதித் திட்டம் முன்வைப்பு.

**ஒக்டோபர் 01 -** அமெரிக்காவில் அரச நிர்வாகம் முடக்கம்.
**ஒக்டோபர் 06 -** ரஷ்யாவுக்கு எதிராகப் போரிட்ட ஆஸ்திரேலியருக்கு 14 ஆண்டுகள் சிறை.


இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் கைது

**ஒக்டோபர் 10 -** அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுலா நாட்டில் 'இரும்புப் பெண்மணி' என்று அழைக்கப்படும் மரியா கொரினா மச்சாடோவுக்கு!
**ஒக்டோபர் 11 -** நியூ சவூத் வேல்ஸ் மாநிலத்தில் இலகு ரக விமானம் விபத்து: மூவர் பலி.
**ஒக்டோபர் 14 -** இலங்கையில் நீதிமன்றத்தில் நடந்த படுகொலையுடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி இந்தோசியாவில் கைது.
**ஒக்டோபர் 14 -**ஆஸ்திரேலிய அரசியல்வாதிகளின் தொலைபேசி இலக்கங்கள் கசிவு.
**ஒக்டோபர் 15 -** இலங்கையின் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார கைது.
**ஒக்டோபர் - 21-** ஜப்பான் வரலாற்றில் முதல் பெண் பிரதமர்.
**ஒக்டோபர் 22 -** இலங்கை- மாத்தறை, வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்ரமசேகர சுட்டுக்கொலை .
**ஒக்டோபர் - 24 -** ரஷ்யாவின் மிகப்பெரிய இரு நிறுவனங்கள்மீது அமெரிக்கா தடை.
**ஒக்டோபர் 27 -** தாய்லாந்து - கம்போடியா இடையே சமாதான ஒப்பந்தம் கைச்சாத்து.
**ஒக்டோபர் 29 -** 33 வருடங்களுக்கு பிறகு அணு ஆயுதச் சோதனை: ட்ரம்ப் உத்தரவு.
**ஒக்டோபர் 31 -** யாழ். பல்கலைக்கழக நூலகத்திலிருந்து துப்பாக்கி, மகசீன்கள் மீட்பு.
**ஒக்டோபர் 31-** ஆஸ்திரேலியா, நியூகினியாவுக்கிடையில் புதிய பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்து.


தமிழகம் கரூரில் , நடிகர் விஜயின் பிரசாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலி

**நவம்பர் 04 -** சிட்னி போராட்டத்தில் குழப்பம்: 13 பாலஸ்தீன ஆதரவாளர்கள் கைது.


ஆஸி. நாடாளுமன்றத் தேர்தலில் லேபர் கட்சி அமோக வெற்றி

**நவம்பர் 05 -** நியுயோர்க் நகர மேயர் தேர்தலில் ஜோஹ்ரான் மம்தானி வெற்றி.
**நவம்பர் 07-** இலங்கை அரசாங்கத்தின் வரவு- செலவுத் திட்டம் முன்வைப்பு.
**நவம்பர் 09 -** இஸ்ரேல் பிரதமர் உள்ளிட்டவர்களை கைது செய்யுமாறு துருக்கி உத்தரவு.
**நவம்பர் 17 -**பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பு
**நவம்பர் 18 -** ட்ரம்பின் காசா அமைதி திட்டத்துக்கு ஐ.நா. பாதுகாப்பு சபை அங்கீகாரம்.
**நவம்பர் 19 -**ஒரே இரவில் 470 ட்ரோன்கள், 48 ஏவுகணைகள் வீசி உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல்.
**நவம்பர் 20 -**ஆஸ்திரேலிய சகோதரர்களை கொலை செய்த மெக்சிகோ பெண்டுக்கு 20 ஆண்டுகள் சிறை.
**நவம்பர் 20 -** ஐ.நா. காலநிலை மாநாட்டை நடத்தும் வாய்ப்பு துருக்கி வசமானது
**நவம்பர் 23 -**ஜி - 20 நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு தென்னாபிரிக்காவில் ஆரம்பம்.
**நவம்பர் 24 -** 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு பிறகு எதியோப்பியாவில் வெடித்த எரிமலை.
**நவம்பர் 25 -**ஆஸி. செனட் சபைக்கு புர்கா அணிந்துவந்து சர்ச்சையை ஏற்படுத்திய வன் நேஷன் கட்சி தலைவர் செனட்டர் பவுலின் ஹான்சன் இடை நீக்கம்.
**நவம்பர் 25 -** ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வாவுக்கு எதிராக புலம்பெயர் தமிழர்கள் லண்டனில் போராட்டம்.
**நவம்பர் 27 -** மாவீரர் தினம் தாயகத்திலும், புலத்திலும் அனுஷ்டிப்பு
**நவம்பர் 27 -** இலங்கையில் பேரழிவை ஏற்படுத்திய டித்வா புயல்.

**டிசம்பர் 06 -** பாலியில் 14 ஆஸ்திரேலியர்கள் கைது.
**டிசம்பர் 07 -** இலங்கையின் முன்னாள் அமைச்சர் செல்லையா இராஜதுரை இயற்கை எய்தினார்.
**டிசம்பர் 09 -** இலங்கையில் போர் குறித்து பொன்சேகா எழுதிய நூல் வெளியீடு
**டிசம்பர் 12 -** தாய்லாந்து நாடாளுமன்றம் கலைப்பு.
**டிசம்பர் -14 -** போண்டியில் யூத சமூகத்தை இலக்கு வைத்து பயங்கரவாதத் தாக்குதல்: 15 பேர் பலி
**டிசம்பர் 19 -** சிரியாவிலுள்ள ஐ.எஸ். இலக்குகள்மீது அமெரிக்கா தாக்குதல்
**டிசம்பர் 22 -** இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை விஜயம்.
**டிசம்பர் 24 -** துப்பாக்கி மற்றும் போராட்ட சீர்திருத்த சட்டமூலம் நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்றில் நிறைவேற்றம்.
**டிசம்பர் 26 -** இலங்கையில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கைது.

# SST SPICES & Things




**Indian | Sri lankan | South Asian**

Groceries & Take away

At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!




## 7 days

## 10 am to 8 pm

SST Spices
& Things
Where quality meets
community

**Location:**
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020

**Contact:**
03 9417 2517

**Email:**
sstspicesnthings@gmail.com

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.





If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin



# எதிர்ப்பக்கம்

## சிறை - அறம் செய விரும்பு

பொதுவாக நான் நண்பர்களைச் சந்திக்கச் செல்லும்பொழுது அவர்களுக்கோ அல்லது அவர்களின் குழந்தைகளுக்கோ பரிசாக புத்தகங்களை மட்டுமே கொடுப்பது வழக்கம். அந்தப் புத்தகப் பட்டியலில் எப்பொழுதும் முதலிடத்தில் இருப்பது ஜெயமோகன் எழுதிய அறம் மட்டுமே. அப்பொழுது அந்தக் குழந்தைகள் என்னிடம் “அறம் என்றால் என்ன?” என்று கேட்பார்கள். அவர்களுக்கு மட்டுமல்ல எனக்கும் புரியும்படியாக நான் சொல்வேன் “Do the Right Thing” அதாவது “மனசுக்கு சரியென்று தெரிவதைச் செய்தல் “.

தமிழில் ஒரு நல்ல படம் பார்த்து வெகுநாட்களாயிற்று. அந்த குறையினைத் தீர்த்து வைத்தது சமீபத்தில் வெளியாகிய “சிறை” திரைப்படம். அதுமட்டுமல்ல மதுரையில் திரையரங்கில் படம் பார்ப்பதும் ஒரு அனுபவமே. பார்வையாளர்களின் கரகோஷங்களுடன் பார்ப்பதெல்லாம் நான் வாழும் ஊரில் அபூர்வமே. ( ஒரு சில விதிவிலக்குகள் தவிர்த்து ).

வெற்றிமாறனின் உதவியாளராகப் பணியாற்றிய சுரேஷ் ராஜகுமாரின் இரண்டாவது படம். குருவைப் போன்றே ஒவ்வொரு காட்சிகளிலும் விவரணைகளில் வெகுகவனம் செலுத்தியிருக்கிறார். நீதிமன்றம்,சிறை, பேருந்துப் பயணம் போன்ற காட்சிகளில் பின்னாலுள்ள உழைப்பு நன்கு தெரிகிறது. விக்ரம் பிரபு வெகு சிறப்பாக நடித்திருக்கிறார். ஒரு சராசரி ஏட்டய்யாவாக ( அந்த பணிக்கேயுரிய அளவான கர்வம், அதிகாரத்தின் முன் கையறு நிலையில் தவித்தல் , ஒரு கணவனாக என்று பல பரிமாணங்கள்).

வட இந்தியா மட்டுமல்ல தமிழ்நாட்டிலும் வளர்ந்து வரும் மத சகிப்பின்மையை மிகத் தெளிவாகச் சில காட்சிகளில் காட்டிவிடுகின்றனர். நீதிமன்ற வளாகத்தில் தொழுகை செய்வதை எதிர்ப்பது (அந்த வளாகத்தில் ஒரு கோவில் உள்ளதை காட்டுமிடம் சிறப்பு). விசாரணைக் கைதியை அழைத்துச் செல்லும்பொழுது ஏன் தோட்டாவினை ’லோட்’ (load) செய்திருக்கிறீர்கள்? எனும்போது “அவன் ஒரு இஸ்லாமியன்” என்பதும் , அதற்கு காவல் அதிகாரியின் மறுமொழியும் அற்புதம்.

இந்தப்படத்தின் போஸ்டர் பார்த்து கவரப்பட்டே நான் சென்றேன். சிறைக்கம்பிகளின் பின்னால் கதிரவன் (விக்ரம் பிரபு) , அப்துல் ரவுப் ( கைதி ), காந்தி புகைப்படம். இந்த மூன்று பேருமே தங்களுக்கு சரியென்று பட்டதை தங்களுக்கு இன்னல் நேரினும் தயங்காமல் செய்தவர்கள் (அறத்தின் வழி நடந்தவர்கள்). இதில் உள்ள காந்தியின் சிரிப்பு நம்மைத் தொந்தரவு செய்யும்.படத்தில் சில தர்க்கப்பிழைகள் இருந்தபோதிலும் ஒரு முழுத்திரைப்படமாக நம்மைக் கவரவே செய்கிறது.

சிறை படத்தின் கதையை மிகச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் நாம் வாழும் / வேலை செய்யும் அமைப்பில் நமக்கென்று ஒரு குறைந்தபட்ச அதிகாரம் இருக்கிறது. அறத்தை நிலைநாட்டிட அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டும் என்பதே .இங்கே கதிரவனை ( விக்ரம் பிரபு ) சுற்றியுள்ளவர்கள் யாரும் கெட்டவர்கள் இல்லை.அவர்களுக்கான நியாயம் அதில் இருக்கிறது. அதையெல்லாம் தாண்டி ( நமக்கு கண்டிப்பாக பல்வேறு தொந்தரவுகள் வரவே செய்யும். நாம் எல்லோரும் வாழும் இந்த சிறையில் ( அமைப்பில் ) நம்மாலான நல்ல காரியங்களை எளிய மனிதர்களுக்கு செய்தால் மட்டுமே உண்டாலம்ம இவ்வுலகம்.

கண்டிப்பாகத் திரையில் பாருங்கள். ஒரு அருமையான அனுபவம் உங்களுக்கு கிடைக்கும் என்று நிச்சயமாக சொல்ல முடியும்.

## ஆஸி மண்ணில் எரிந்து சாம்பலான இங்கிலாந்து கிரிக்கெட் (Bazball)

ஆஷஸ் தொடர் தொடங்கும் முன்பு கிரிக்கெட் விளையாட்டின் அனைத்து நிபுணர்களும் கணித்தது இந்த முறை இங்கிலாந்து அணி வெகு எளிதாகக் கோப்பையை வெல்லும் என்பது தான் . அதாவது இந்தத் தொடர் வரலாற்றில் இருப்பதிலேயே பலம் குறைந்த ஆஸி அணியை எதிர்ப்பதால். ( Pat Cummins, Josh hazelwood, Steve Smith, Nathan Lyon, Usman Khawaja - காயம் காரணமாக முழுத் தொடர் அல்லது சில போட்டிகளில் விளையாடவில்லை )

ஆனால் ஆஸி அணியினர் வழக்கம் போல அனைவரின் கணிப்புகளையும் தவிடுபொடியாக்கி கோப்பையை 4-1 என்ற கணக்கில் வென்றிக்கின்றனர். கடந்த 2023 ஆண்டு தொடரில் 2-2 சமனில் முடிந்ததால் கோப்பையை நாம் தக்கவைத்துக் கொண்டோம் என்பது அனைவரும் அறிந்ததே.

வெற்றியின் வாயிலிருந்து தோல்வியை எப்படி பிடுங்குவது என்பதை இந்த முறை இங்கிலாந்து அணியினர் நமக்கு பாடம் நடத்தினர். அவர்களின் தோல்விக்கு பல காரணங்கள் இருப்பினும் மிக முக்கியமானவை பின்வருமாறு

1. ஒரு முறை கூட தொடக்க ஆட்டக்காரர்கள் வலுவான அடித்தளம் அளிக்காதமை

2. நன்றாக விளையாடும்போது தேவையில்லாமல் அடித்து விளையாடி விக்கெட்டுகளை இழத்தல்

3. பந்து வீச்சாளர்கள் சொதப்பியது . சுழலுக்கு சாதகமான அடிலெய்ட் மைதானத்தில் அணியில் சிறந்த பவுலர் இன்றி விளையாடியது

4. Drop catches miss Ashes என்பது போல ஆட்டத்தில் மிக முக்கியமான விக்கெட்களின் கேட்சுகளை தவறவிடுதல்

-என்று காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம் . மொத்ததில் மிக மோசமாக இங்கிலாந்து அணி விளையாடி தொடரை இழந்தது.

ஆஸி தரப்பில் அனைவரும் தங்கள் பங்கினை சிறப்புடன் ஆற்றிய போதிலும் குறிப்பாக Travis Head, Mitchel Starc இருவரும் மிகச் சிறப்பாக விளையாடினர்.

Steve Smithம் தன் பங்கிற்கு கடைசிப் போட்டியில் சதம் அடித்தார்.

அவன் பொருளை எடுத்து அவனையே போடுறது என்பது இது தான்! இங்கிலாந்து அணியினரின் Bazball எனப்படும் காட்டடி விளையாட்டு முறையை Travis Head விளையாடி இரண்டு போட்டிகளில் அணியின் வெற்றிக்கு காரணமாக இருந்தார்.

ஆஷஸ் தொடர் எப்பொழுதும் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பும். இந்தத் தொடர் பெரிதும் ஆராவரமின்றி ஒன்றிரண்டு சர்ச்சைகள் தவிர்த்து ( snicko doubts, Marnus out due to grounded catch - benefit of the doubt should be favour to batsman) அமைதியாக முடிந்திருக்கிறது.

இந்தத் தொடரில் மற்றொரு குறிப்பிடத்தக்க நபர் யாரென்றால் முன்னாள் ஆஸி கிரிக்கெட் வீராங்கனை மற்றும் வர்ணனையாளர் Alyssa Healy இன் வர்ணனை. மிக நேர்த்தியாகவும் மற்றும் கிரிக்கெட் நுணுக்கங்களை கொண்டதாகவும் அருமையாக இருந்தது. அது மட்டுமின்றி அவரது கணவர் Mitchell Starc - Man of the Series விருது வாங்கும்போது அவரின் ரியாக்சன் அற்புதம்.

இந்த வெற்றிக்கு பிறகு மிகப்பெரும் சவால்கள் ஆஸி அணிக்கு காத்திருக்கின்றன. 1. அணியின் அடுத்த சுழல் பந்து வீச்சாளர் யார் considering Nathan Lyon’s Age 2. Who will replace Usman Khawaja’s place 3 . Cameron green will get continuos chance despite poor series? 4. Who will be the captain Pat cummins or Steve Smith going forward? and so on.

எது எப்படியோ டீயசஅல யுசஅலயின் சலசலப்புகள் மற்றும் கோமாளித்தனங்களை காண்பதற்கு இன்னும் 4 வருடங்கள் காத்திருக்க வேண்டும். வாழ்க்கையில் நல்ல விஷயங்கள் மட்டுமல்ல கோமாளித்தனங்களுக்கும் காக்கத்தான் வேண்டும்.

## பாரதி ‘சக்தி’



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

இணையத்தில் உலாவிக்கொண்டிருந்தபொழுது தற்செயலாக தமிழ் மின்நூலகத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து சொக்கன் என்பவர் தொகுத்த பாரதியின் சக்திப் பாடல்கள் புத்தகம் கிடைத்தது. பாரதியார் எழுதிய பராசக்தி மற்றும் காளி பற்றிய பாடல்களை ஒன்றாக தொகுத்து தந்துள்ளார். இப்பொழுதுள்ள செயற்கை நுண்ணறிவு யுகத்தில் இதெல்லாம் ஒரு நிமிடத்தில் முடித்துவிடலாம். இந்த புத்தகம் 1982ஆம் ஆண்டு வெளிவந்திருக்கிறது. பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன. அவற்றின் தெளிவுரையையோ அல்லது அந்த கவிதைகளைப் பற்றிய அவரது புரிதல்களையோ காண முடியவில்லை. ஆயினும் சக்தி பற்றிய அனைத்துக்கவிதைகளையும் ஒரிடத்தில் காணும்பொழுது மகிழ்ச்சி.

ஏறக்குறைய எல்லாப் பாடல்களையும் ஏற்கனவே படித்திருக்கிறேன் என்றாலும், சில பாடல்கள் மனதுக்கு மிக நெருக்கமானவை. குறிப்பாக பாரதியின் “மஹாசக்திக்கு விண்ணப்பம்”. இந்தப் பாடலைப் படிக்கும்பொழுது நெஞ்சமெல்லாம் கிளர்ந்தெழும். மகாராஜபுரம் சந்தானத்தின் குரலில் இந்தப் பாடலை கேட்கும்பொழுது கண்ணீர் பெருகி ஓடும்.

“உள்ளம் குளிராதோ?-பொய்யாணவ
ஊனம் ஒழியாதோ?
கள்ளம் உருகாதோ?-அம்மா!பக்திக்
கண்ணீர் பெருகாதோ?
வெள்ளைக் கருணையிலே இந்நாய் சிறு
வேட்கை தவிராதோ?
விள்ளற் கரியவளே அனைத்திலும்
மேவி யிருப்பவளே! “

அன்னையை எவ்வாறு பார்க்க முடியும்? அவளைச் சொற்களில் எளிதாக அடக்கிவிட முடியாது. சொற்களின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டு நிற்பவள் அவள். அவ்வாறென்றால் சக்தியை எவ்வாறு உணர முடியும்? தாமரையில் பிரகாசமான ஒளியில் , கருங்கலில் அறிவு ஒளியைக் காணும் கண்களில் , கால வெள்ளத்தில் நிலைத்து நிற்பதைக் காண்கையில் , புல்லின் நுனியில் வைரத்தை பார்க்கையில் அன்னை பராசக்தியை காணமுடியும் என்கிறான் மகாகவி.

சொல்லினுக் கெளிதாக
நின்றிடாள், சொல்லை வேறிடஞ்
செல்ல வழிவிடாள், அல்லி
னுக்குட் பெருஞ்சுடர் காண்பவர்
அன்னை சக்தியின் மேனி
நலங்கண்டார், கல்லினுக்குள்
அறிவொளி காணுங்கால், கால
வெள்ளத்திலே நிலை காணுங்
கால், புல்லினுள் வயிரப்படை
தோன்றுங் கால் பூதலத்தில்
பராசக்தி தோன்றுமே!

பாரதியின் ஊழிக்கூத்து எனக்கு பிடித்த மற்றோடு பாடல். கற்றது தமிழ் படத்தில் ஜீவா , தகவல் தொழில்நுட்ப சேவைத்துறையில் வழிமறித்து நன்றாக ஆங்கிலம் பேசுகிறாயே . நான் சொல்லும் இந்த பாரதியார் பாடலை திரும்பி சொல்ல முடியுமா என்று சவால் விடுவார். அந்தப் பாடலின் கர்ஜனை இன்னும் நெஞ்சில் நிற்கிறது.

வெடிபடு மண்டத் திடிபல தாளம் போட-வெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம் பாட-பாட்டின்
அடிபடு பொருளின் அடிபடு மொலியிற் கூடக்-களித்
தாடுங் காளீ!சாமுண் டீ!கங் காளீ!
அன்னை!அன்னை!ஆடுங் கூத்தை
நாடச் செய்தாய் என்னை.

பாரதி பெண்ணுரிமை என்பதை வெறும் பேச்சில் மட்டும் கொண்டவனில்லை. பெண்களை சக்தியின் வடிவமாக கண்டவன். பராசக்தி ,மகாகாளி ,தேச முத்துமாரி எல்லாம் அவன் குலதெய்வங்கள். போலி பகுத்தறிவு பேசிய பேதைகள் உலகில் உண்மையான சக்தியைப் பாடியவன்.

# “தமிழ்த் தேசியவாத அரசியலில் அணுகுமுறை மாற்றங்கள் வேண்டும்”

## சுமந்திரனுடன் ஒரு நேர்காணல்

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு, அரசியலமைப்பு மாற்றம், தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்தி, மாகாணசபைகளுக்கான தேர்தல் மற்றும் அதிகாரம், ஆட்சிலிருக்கும் தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகள், தமிழரசுக் கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் எனப் பல விடயங்களையும் குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமாகிய ஜனாதிபதி சட்டத்தரணி திரு. எம்.ஏ. சுமந்திரனுடன் 'எதிரொலிக்காக' நிகழ்த்திய நேர்காணல் இது.**

● கருணாகரன்



**கேள்வி: இலங்கையில் மிகப் பெரிய பிரச்சினைகளாகத் தொடரும் இனப்பிரச்சினை, பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுக்குத் தீர்வைக் காண்பது எப்படி? இதற்கான சரியான வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கு ஆட்சியாளர்களால் முடியாதிருப்பது ஏன்?**

பதில்: எந்தவொரு பிரச்சினையும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு முக்கியமான காரணம், இந்தத் தீவில் சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக இருந்தாலும் உலகிலும், இந்தப் பிராந்தியத்திலும், அவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவானவர்கள். எனவே அவர்களுக்கு இயல்பாகவே ஒரு பீதி - உளவியல் ரீதியான அச்சம் - இருக்கிறது. அரசியல் தீர்வு விடயத்தில் இது வெளிப்படையாகத் தெரிகிறது. அதனால்தான் அவர்கள் பௌத்தத்துக்கும் சிங்களத்துக்கும் முதலிடத்தைக் கொடுக்க வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். பொருளாதார விடயங்களிலும் தங்களை மற்றவர்கள் விழுங்கி விடுவார்கள் என்ற பயம் உள்ளது, இது சுயாதீனமாக முடிவுகள் எடுப்பதைத் தடுக்கிறது. ஆட்சியாளர்கள், மக்களுக்கு அவர்களது பயம் நீங்கும்படியான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் மாற்றமும் தீர்வும் முன்னேற்றமும் நிகழும்.

**கேள்வி: மக்களுடைய உணர்வுகளும் தேவைகளும் நாடாளுமன்றத்திலும் ஆட்சியிலும் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவது எதற்காக?**

பதில்: முழுமையாக அப்படிப் புறக்கணிக்கப்படுவதாகச் சொல்ல முடியாது. ஒரு சில தருணங்களில் அதிகாரப் போதை காரணமாக மக்களது உணர்வுகளையும் தேவைகளையும் ஆட்சியாளர்கள் மறந்து விடுகிறார்கள்.

**கேள்வி: அப்படிச் சொல்ல முடியாதே! மக்களுடைய உணர்வுகளும் தேவைகளும் புறக்கணிக்கப்பட்டதால் தானே நாட்டில் பிரச்சினைகள் மேலும் மேலும் கூடிச் சென்றிருக்கின்றன. புதிய பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அது உலக வழமை. பழைய - பல பத்தாண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்வதற்குக் காரணம், மக்களுடைய உணர்வுகள் புறக்கணிக்கப்பட்டதனால்தானே?**

பதில்: மக்களுடைய உணர்வுகள் மதிக்கப்பட்டால் மட்டும் பிரச்சினைகள் தீராது. பல சந்தர்ப்பங்களில் இவை இரண்டுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. மாறாக சில சமயங்களில் மக்களின் உணர்வுகளை புண்படுத்தாமல் இருக்க நினைப்பதனாலேயே பிரச்சினைகளையும் தீர்க்க முடியாமல் இருக்கும்.

**கேள்வி: நாடாளுமன்ற ஜனநாயகம் அர்த்தமிழந்த ஒன்றாக மாறுவதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

பதில்: அதற்கும் காரணம் மக்கள்தான். அவர்கள் பொறுப்போடும் தூர நோக்கோடும் தங்களது தெரிவுகளை மேற்கொண்டால் நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் மேலோங்குவதைக் காணலாம். குறுகிய நோக்கங்களுக்காக தவறானவர்களைத் தெரிவு செய்தால் நாடாளுமன்ற ஜனநாயகம் அர்த்தமற்றதாக மாறி விடும்.

**கேள்வி: மாற்றத்துக்கான ஆட்சி, System Change என்றெல்லாம் சொல்லி அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மெய்யாகவே மாற்றத்துக்கான வழியில்தான் பயணிக்கிறதா?**

பதில்: ஓரளவு மாற்றம் தெரிகிறது. இது ஆரம்பம் மட்டும்தான் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களது பல செயற்பாடுகள் மாற்றத்தை நோக்கியதாகவே தென்படவில்லை. இதுவும் பழைய குருடி கதவைத் திறடி என்றுதான் முடியும்.

**கேள்வி: அவ்வாறில்லை என்றால், அதைச் சரியான திசையில் செலுத்துவதற்கான வழிமுறைகள் என்ன? இதில் எதிர்க்கட்சிகளின் திறனும் அர்ப்பணிப்பும் எப்படி உள்ளது? எப்படி அமைய வேண்டும்?**

பதில்: எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக அரசாங்கத்தை சவாலுக்கு உட்படுத்த வேண்டும். அதற்கான திறனோ அர்ப்பணிப்போ பிரதான எதிர்க் கட்சியிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

**கேள்வி: நாட்டின் தேவை, மக்களின் எதிர்பார்ப்பு, சிறுபான்மைத் தேசிய இனங்களான தமிழ் பேசும் சமூகங்களின் நியாயமான உரிமைகளில் எல்லாம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிலைப்பாடும் செயற்பாடும் (நடைமுறைகள்) எப்படி உள்ளது?**

பதில்: தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் சார்ந்த விடயங்களை இந்த அரசு நியாயமான முறையில் அணுகுவதாக தெரியவில்லை. அப்படி ஒரு தேசிய இனப்பிரச்சினை இருப்பதையே அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் எந்த செயற்பாடும் அதை ஒட்டியதாக இல்லை.

**கேள்வி: முன்னைய ஆட்சியாளர்களுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் என்ன? ஒற்றுமைகள் என்ன?**

பதில்: தீர்க்கப்படாத இனப்பிரச்சினை ஒன்று இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளாத நிலைப்பாடு முன்னைய ஆட்சியாளர்களுக்கும் இவர்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைக் காட்டுகிறது. ஊழல் விவகாரங்கள் மிக குறைவாக காணப்படுவதுதான் வேற்றுமை.

**கேள்வி: ஒப்பீட்டளவில் ‘தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பரவாயில்லை. முன்னேற்றகரமானது’ என்ற அபிப்பிராயம் உள்நாட்டிலும் சர்வதேச சமூகத்திலும் உண்டு. இப்படியான சூழலில் இந்த அரசாங்கத்தோடு பல விடயங்களில் சேர்ந்து செயற்படும் வாய்ப்புள்ளது அல்லவா!**

பதில்: ஆம். ஆனால் எவரையும் சேர்த்து செயற்படும் எண்ணம் தேசிய மக்கள் சக்திக்கு அறவே கிடையாது.

**கேள்வி: அப்படியென்றால், இது கதவைச் சாத்திக் கொண்டு மூடப்பட்ட அறைக்குள் குடித்தனம் நடத்துவதைப்போன்ற ஒரு ஆட்சியா? அரசியல் சொல்லாடலில் இதை ஏகத்துவத்தின் சர்வாதிகார இயல்பு (The authoritarian nature of monotheism) என்று சொல்லலாமா?**

பதில்: ஆம். நிச்சயமாக அப்படித்தான்.

**கேள்வி: தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் தமிழரசுக் கட்சி எத்தகைய அணுமுறையைப் பேண விரும்புகிறது? ஏனென்றால், ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, தேசிய மக்கள் சக்தியுடன் சிநேகபூர்வமானதொரு உறவு தனிப்பட்ட ரீதியில் உங்களுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இருந்தது. அந்த உறவை ஆட்சியிலிருக்கும் போது மேலும் வளர்த்தெடுக்க முடியாமலிருப்பது ஏன்?**

பதில்: தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களோடு தனிப்பட்ட சிநேகிதம் இருந்தது. ஆனால் ஆட்சியாளர்களான பின்பு அவர்களது அரசியல் நகர்வுகள் பலவற்றை நாம் பகிரங்கமாக எதிர்க்க வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டது. அதை நாம் செய்கிறபோது அவர்கள் அதனை ஏற்றுக் கொள்கிற மனப் பக்குவம் உள்ளவர்களாகத் தெரியவில்லை. அந்தச் சூழலில் முன்னர் இருந்த சிநேகிதத்தைப் பேண முடியாதுள்ளது.

**கேள்வி: தமிழ் அரசியற் தரப்பினர் கோருகின்ற - எதிர்பார்க்கின்ற - வலியுறுத்துகின்ற அரசியல் அதிகாரத்தை (சமஷ்டி உள்ளடங்கலான தீர்வை) வழங்குவதற்கான அரசியல் உளநிலை ஆட்சியாளர்களிடத்திலும் இல்லை. ஆட்சிக்கு வெளியே உள்ள சிங்கள அரசியலாளர்களிடத்திலும் சிங்களச் சமூகத்திடமும் இல்லை. அரசியலமைப்பு மாற்றம், அரசியற் தீர்வு ஆகியவற்றை எட்டுவதாக இருந்தால், சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இவ்வாறான ஒரு சூழலில் எப்படித் தமிழ்மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வைப் பெறுவது?**

(18ஆம் பக்கம் பார்க்க)

# “தமிழ்த் தேசியவாத அரசியலில் அணுகுமுறை மாற்றங்கள் வேண்டும்”

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதில்: எந்த அரசியல் தீர்வுக்கும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியே ஆக வேண்டும் என்பது எமது நிலைப்பாடு. அது இல்லாமல் எந்த தீர்வும் நீடித்து நிலைக்காது. அது முடியாத காரியமல்ல. ஆட்சியிலிருக்கும் கட்சியும் நாமும் கூட்டாக மக்கள் முன் சென்று தீர்வை விளக்கினால் இது இலகுவாகச் சாத்தியப்படும்.

**கேள்வி: ‘தமிழ்த் தேசியவாத அரசியலை முன்னெடுக்கும் தரப்புகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும்‘ என்ற கோரிக்கையின் நடைமுறைச் சாத்தியமென்ன? தற்போது இந்த விடயத்தில் ஒரு இணக்க மனநிலை - ஐக்கியத்துக்கான சூழல் - தென்படுகிறது. அதேவேளை ‘இது நேர்மையான உறவாக இருக்கப்போவதில்லை. சந்தர்ப்பவாதக் கூட்டு’ என்ற பேச்சுகளும் சமாந்தரமாக உள்ளது. மெய்யாகவே தமிழ்க் கட்சிகளின் ஐக்கியத்தை உருவாக்குவதற்கு உங்களுடைய உளப்பூர்வமான எண்ணங்களும் நடவடிக்கைகளும் என்ன?**

பதில்: தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரு அணியில் சேர்ந்து இயங்குவது சாத்தியமான ஒரு விடயமே. தங்கள் கட்சிகளின் தனித்துவத்தை இழந்து விடாமல் அரசியல் தீர்வு விடயத்தில் இணங்கிச் செயற்படலாம். தேர்தல் கூட்டு இருந்தாலும் இல்லாவிட்டாலும் தீர்வு விடயத்தில் இணைந்து செயற்படுவது அத்தியாவசியமானதும் கூட.

**கேள்வி: தமிழரசுக் கட்சி, கட்சிக்கு உள்ளே (ஒழுக் காற்று நடவடிக்கைகளில்) இறுக்கமாகவும் வெளியே ஏனைய அரசியற்தரப்புகளோடு இணக்கமாகவும் செயற்படுகிறது. புதிய தலைமையில் ஒரு பண்பு மாற்றத்தை உணர முடிகிறது. கட்சியின் எதிர்காலத்தைக் குறித்து நிதானமாகச் சிந்திப்போரிடத்திலும் தமிழ்ச் சமூகத்தின் அரசியலைப்பற்றி அக்கறைப்படுவோரிடத்திலும் இதற்கு எத்தகைய வரவேற்புண்டு?**

பதில்: இதற்குபெரும் வரவேற்பு உண்டு. இப்போதுதான் கட்சி கட்டுப்பாட்டோடு செயற்படுகிறது என்பது அனைவருடைய கருத்தாக உள்ளது. ஒற்றுமையில் பலம் உண்டு என்பதனால் மற்றைய கட்சிகளோடு இணக்கமாகச் செயற்பட வேண்டிய தேவை உள்ளது என்பதையும் அனேகமானோர் புரிந்து வைத்துள்ளார்கள்.

**கேள்வி: நாடாளுமன்றத்தினால் செய்ய முடியாத ஆட்சி மாற்றச் சூழல் ஒன்றை மக்கள் தமது ‘அரகலய’ (2022 Sri Lankan protests) போராட்டத்தின் மூலமாக நிறைவேற்றியிருக்கிறார்கள் . இனப்பிரச்சினைக்கான தீர்வு, அரசியலமைப்பு மாற்றம் உள்ளிட்ட முக்கியமான வேலைகளையும் அப்படித்தான் செய்ய வேண்டும் என்பதைத்தானே பிந்திய நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. அப்படியென்றால் மக்கள் போராட்டத்தோடு நீங்களும் எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டியது அவசியமல்லவா?**

கேள்வி: அரகலயவில் நாமும் பங்கு கொள்ள வேண்டும் என்று அந்த வேளைகளில் நான் பல தடவை சொல்லி இருக்கிறேன். ஆனால் அரசியலமைப்பு மாற்றம் இறுதியில் ஒரு சட்ட முறைமையினூடாகத் தான் செய்யப்பட வேண்டும். அது மட்டுமல்ல, மக்களோடு சேர்ந்து அறகல போன்ற போராட்டங்களில் ஈடுபடுவது ஒன்று. ஆனால் மற்றைய எதிர்க்கட்சிகளோடு இணைந்து செயல்படுவது என்பது வித்தியாசமானது. யாரோடு எதற்காக இணைவது என்பது முக்கியமானது.

**கேள்வி: தமிழ்த் தேசியவாத அரசியலில் புத்துணர்வற்ற - புதிய சிந்தனைகளற்ற சம்பிரதாயத்தன்மையே மேலோங்கியுள்ளது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது. உலக மாற்றங்களையும் பிராந்திய - உள்நாட்டு நிலைவரங்களையும் உய்த்துணர்ந்து செயற்படக் கூடிய தன்மை போதாதென்றும் சொல்லப் படுகிறது. இதற்கான காரணங்கள் என்ன?**

பதில்: தமிழ்த் தேசியவாத அரசியல் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்த போது ஜனநாயகப் போராட்டம் எப்படி இருந்ததோ, அதே பாணியில் போருக்குப் பின்னரான அரசியலையும் நகர்த்தியதே இதற்குக் காரணம். அதே பாணியில் பயணிப்பதற்கு வலுவான காரணங்கள் இருந்த போதும் 3 தசாப்த இடைவெளியை அனுசரித்து சில அணுகுமுறை மாற்றங்களைச் செய்திருக்க வேண்டும்.

**கேள்வி: பல்வேறு நாடுகளின் தலைவர்கள், தூதுவர்கள், பிரதானிகளோடு பேசிவரும் உங்களுடைய அனுபவத்தில் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற போர்க்குற்ற விசாரணை, அரசியல் தீர்வு, அரசியலமைப்பு மாற்றம் போன்றவற்றுக்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றனவா?**



பதில்: ஒரு நியாயமான அரசியல் தீர்வுக்கு நிச்சியமாக அவர்கள் அழுத்தம் கொடுப்பதற்கு தயாராக இருப்பார்கள். அதை அடைவதற்கு போர்க்குற்ற விசாரணையை உபயோகிப்பார்கள்.

**கேள்வி: பௌத்த விரிவாக்கம், சிங்கள மேலாதிக்கம் போன்றவற்றை நடைமுறையிலும் (ஆட்சிமுறையிலும்) அரசியலமைப்பில் முதன்மைப்படுத்தியும் வைத்திருப்பது பன்மைத்துவத்துக்கும் ஜனநாயகத்துக்கும் அச்சுறுத்தல் அல்லவா! இதைக்குறித்துத்தானே வெளியுலகச் சமூத்தின் கவனத்தைத் திருப்ப வேண்டும். அப்படித் தமிழ்த்தரப்பு எங்கேனும் செயலாற்றியுள்ளதா?**

பதில்: ஆம். எல்லாத் தருணங்களிலும் இதை உதாரணமாக எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

**கேள்வி: இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் அரசியமைப்பு மாற்றத்துக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் அரசியல் கட்சிகளுக்கு அப்பால் புத்திஜீவிகள், பல்கலைக்கழகத்தின் அரசியல் மற்றும் சமூக ஒருங்கிணைப்புத் துறையினரின் பரிந்துரைகள் எதையும் முன்வைப்பதில் அக்கறையற்றிருப்பது ஏன்?**

பதில்: போர்ச் சூழலில் அப்படியானவர்கள் ஒதுங்கி இருக்கவே விரும்பினார்கள். இப்போதும் சமூக வலைத்தளங்களினூடாக செய்யப்படும் அவதூறுகள் காரணமாக பலர் இப்படியான பொது விடயங்களில் ஈடுபட விரும்புவதில்லை.

**கேள்வி: இந்தியாவின் அரசியல், பொருளாதார பங்களிப்புகளைப் பற்றி உங்கள் பார்வை என்ன?**

பதில்: இந்தியா இந்தப் பிராந்திய வல்லரசு என்பதையும் தாண்டி ஒரு உலக வல்லரசாக மாறியுள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இதற்கான முக்கியமான காரணம். மிக அண்டை நாடான நாம் இந்தியாவின் வளர்ச்சியை எமதாக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு இந்தியாவின் பங்களிப்பு எமது அரசியலிலும் கட்டாயமாக இருக்க வேண்டும். அது தமிழ் மக்களுக்கு ஒரு போதும் கேடாக அமையாது.

**கேள்வி: தமிழரசுக் கட்சி 75 ஆண்டுகளைக் கடந்து பயணிக்கிறது. ஆனாலும் அது முன்வைத்த அரசியல் கோரிக்கை இன்னும் நிறைவேறவில்லை. இடையில் பல தலைவர்களின் காலம் கடந்து விட்டது. கட்சியின் பதில் செயலாளர் என்ற வகையில் தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வும் தமிழ்ப் பிரதேசங்களின் மேம்பாடும் உங்களுடைய தலைமைத்துவத்தில் எட்டப்படுமா? அதற்கான புதிய பொறிமுறைகளை வகுத்துள்ளீர்களா?**

பதில்: ஆம். எமது கட்சியின் இலக்கு விரைவில் எட்டப்பட வேண்டும். அது இலங்கை மக்களின் பெரும்பான்மையவரின் இணக்கத்தோடு மட்டுமே அடையப்படலாம். அதிகாரப் பகிர்வு சகல மக்களுக்கும் நன்மை பயக்கும் என்பதை அனைவரும் உணர வேண்டும். அதற்கான வேலைத்திட்டம் ஒன்றை இந்த வருடத்தில் ஆரம்பிக்க உள்ளேன். இந்த வருடத்தோடு SWRD பண்டாரநாயக்கா இலங்கைக்கு சமஷ்டி என்ற எண்ணக் கருவை அறிமுகம் செய்து 100 ஆண்டுகள் நிறைவாகின்றது. அதை மையமாக வைத்து இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டால், அது சிங்கள மக்கள் பலரது ஆதரவையும் பெற உதவும் என்பது எனது நம்பிக்கை.

**கேள்வி: ஆட்சியிலிருக்கும் தரப்பின் ஒத்துழைப்போடு தீர்வுக்கான வேலைத்திட்டத்தை மேற்கொண்டாலும் எதிர்த்தரப்பிலுள்ள கட்சிகளின் ஆதரவின்றி இது சாத்தியமாகுமா? சமஷ்டி என்ற சொல்லை ஏற்றுக்கொள்ளக்கூடிய உளநிலை சிங்களத் தரப்பிடமுண்டா?**

பதில்: சிங்களக் கட்சி எதுவும் சமஷ்டி என்ற சொல்லை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகையால் பெயர்ப் பலகையில் தொங்கிக் கொண்டிருக்காமல் அர்த்தமுள்ள விதத்தில் மீளப் பெறப்பட முடியாத அதிகாரப் பகிர்வு முறையை அடைய வேண்டும். அதற்கு நிச்சயமாக எதிர்த்தரப்பு கட்சிகளின் ஆதரவையும் பெற வேண்டும்.

**கேள்வி: அரசியற் தீர்வில் முஸ்லிம்களின் பங்கேற்பும் ஆதரவும் வேண்டுமே?**

பதில்: அதிகாரப் பகிர்வுக்கு முஸ்லிம்களின் ஆதரவு எப்போதுமே இருந்திருக்கிறது. அலகு விடயத்தில் அவர்களுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தாக வேண்டும்.

**கேள்வி: மாகாணசபைத் தேர்தல், மாகாணசபைகளின் இயங்குமுறை, அதற்கான அதிகாரம் என்ற பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு என்ன? அதை எவ்வாறு எட்டுவது?**

பதில்: தற்போது அரசியலமைப்பில் உள்ள அதிகாரங்களை இழந்து விடாமல் அவற்றையாவது நிறைவேற்றச் செய்ய வேண்டும். அந்த அடிப்படையிலிருந்துதான் அடுத்த நிலைக்குச் செல்லலாம். அதற்கு முதலில் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்த அழுத்தம் கொடுக்க வேண்டும். அது நடந்தால் மாகாண சபைகளை உபயோகித்து அரசியலமைப்பிலுள்ள முழு அதிகாரத்தையும் பெற வேண்டும் ■




# அமெரிக்க மேலாண்மையும் மாற்றமுறும் உலக ஒழுங்கும்: டெல்டா படையின் வெனிசுலா அதிரடி!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

2026 புதுவருடம் பிறந்து மூன்றாம் நாளில் மின்னல் வேகத்தில் அமெரிக்கப் படைகள் நடத்திய தாக்குதல் குறித்து பல சர்வதேச இராணுவ வல்லுநர்கள் வியப்பைத் தெரிவித்துள்ளனர். உலகை வியப்பில் ஆழ்த்திய வெனிசுலா தாக்குதலின் மறுபக்க உண்மைகள் என்னென்ன என்று தற்போது வெளியாகி உள்ளன. உளவுப் படைகள் மூலம் வெனிசுலாவிலே நடந்தது பேரம்பேசப்பட்ட விவகாரம் என்றும் சில ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

**ஜனவரி 3, 2026 அதிகாலை.**

வெனிசுலாவின் தலைநகர் காரகஸில் அரசியல் மட்டுமன்றி, ஆகாயமும் அமைதியின்மையின்றியே இருந்தது.

அன்று காலை முதல் செய்தி வெளியான பின்னர் உலக அரசியலின் நீதி அமைப்பே உடைந்து போனதாக தென்பட்டது.

**மின்னல் வேகத் தாக்குதல்**

வெனிசுலாவின் 'மிராஃப்ளோரஸ்' ஜனாதிபதி மாளிகை மீது மூன்று கறுப்பு ஹெலிகொப்டர்கள் தாழப் பறந்தன. அதிபர் நிக்கோலஸ் மதுரோவின் பாதுகாப்புப் படையின் பயிற்சிதானா அல்லது வேறு படைகளா என்பதை மக்கள் புரிந்துகொள்ள முடியவில்லை.

வெனிசுலா மக்களுக்கு மற்றொரு அரசியல் புயல் அன்றைய காலை ஆரம்பித்தது. அதிகாலை இரண்டு மணிக்கு அமெரிக்காவின் ஏவுகணைகளைத் தகர்க்கும் விமானங்கள் மூன்று வெனிசுலாவுக்குள் நுழைய, கரீபியக்கடலோரம் அணுஆயுத நீர்மூழ்கி கப்பல்கள் நுழைந்தன.

குருஸ் ஏவுகணைகள் தொடர்ந்து காரகஸ் இராணுவத் தளங்களைத் தாக்க, அதிநவீன எம் 60 ஹெலிகொப்டர்கள் அதிரடி வான்படையான டெல்டா அணியுடன் வெனிசுலா அதிபர் மாளிகையில் இறங்கின.

அதே நேரம் முன்பே திட்டமிட்டபடி சைபர் தாக்குதல் முழு அளவில் நடத்தப்பட, நாட்டின் மின்சாரப் பாதுகாப்பு கட்டுப்பாடுகள் தகர்க்கப்பட, அந்தத் தேசமே முழுமையாக தள்ளாடியது.

கீழே இறங்கிய டெல்டா படைகள் உள்ளே பயணித்து அதிபரின் மாளிகைக்குள் நுழைந்தன. அதிபரையும் அவர் மனைவியையும் கைது செய்து ஹெலிகாப்டரில் ஏற்றி மின்னல் வேகத்தில் பறந்தன.

**ஏன் எதிர்த் தாக்குதல் இல்லை?**

இத்தனைக்கும் வெனிசுலாவிடம் 'எஸ் 300, எஸ் 400' வான் பாதுகாப்பு கவசம் உண்டு. அமெரிக்க வான்வெளித் தாக்குதலுக்கு எதிராக ஒரு ஏவுகணை கூட உபயோகிக்கப்படவில்லை என்பது பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

கரீபியக் கடலில் இருந்து நூறு கிலோமீற்றர் உள்ளே சென்று அதிபர் மாளிகையை அமெரிக்கப் படைகள் தாக்கும்போது ஒரு ராணுவ வீரர் கூட அதைத் தடுக்கவில்லை என்பதும் புரியாத புதிராகவே உள்ளது. மேலும் ஒரு தோட்டா கூட அமெரிக்க வீரர்களுக்கு எதிராகச் சுடப்படவில்லை. ஆனால் அமெரிக்க வான் படைகளின் தாக்குதலில் நாற்பது வெனிசுலாப் படையினர் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

ஆனாலும் வெனிசுலா துணை அதிபர், இராணுவத் தளபதி, உள்துறை அமைச்சர் மூவருமே வெனிசுலா அமெரிக்காவுக்கு ஒரு போதும் அடிமையாகாது என்றும், எதிர்த்து போர் புரியும் என்று அறிவித்திருக்கிறார்கள் .

ஆயினும் இந்த மின்னல் வேகத்தில் அமெரிக்கப் படைகள் நடத்திய தாக்குதல் குறித்து பல சர்வதேச இராணுவ வல்லுநர்கள் வியப்பைத் தெரிவித்துள்ளனர். உளவுப் படைகள் மூலம் வெனிசுலாவிலே நடந்தது பேரம்பேசப்பட்ட விவகாரம் என்றும் சில ஊடகங்கள் தெரிவிக்கின்றன. தேவையான பணம் வாழ்விடம் இன்னபிற வசதிகள் அளிக்கிறோம் சொல்படி கேள் என்று அமெரிக்க சொல்ல, வெளியில் முடியாது என்று சொன்ன அதிபர், மறைமுகமாக ஒப்புக் கொண்டார் என்னும் உறுதி செய்யப்படாத தகவல்களும் (Conspiracy Theory) உள்ளன.

வரலாற்றில் அமெரிக்கா வாழ்நாளெல்லாம் வலிமை இல்லாத நாடுகளை தாக்கி வருகிறது. ஈராக், லிபியாவை தொடர்ந்து ஈரான் மீது போர் தொடுக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகி வருகிறது.

முழுநேரப் போர், அதுவும் கொரில்லா யுத்தம் என்று வந்துவிட்டால் வியட்நாம் அனுபவத்தை அமெரிக்கா இன்னும் மறக்கவில்லை. தினமும் உடல்களுடன் அமெரிக்கா வந்த பிணப் பைகள், பொருளாதாரச் செலவு எல்லாம் அமெரிக்காவுக்கு இன்னும் நிறைய நினைவில் இருக்கிறது.

இப்போது இருக்கும் உலகளாவிய மோசமான பொருளாதார நிலையில் அப்படி ஒரு நிலைவந்தால் அது எரிகிற தீயில் எண்ணெய் விட்டதைப் போலவே இருக்கும். இதனால் போரே இல்லாமல், பொம்மை அரசாங்கம் ஒன்றை நிறுவ அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இதன் மூலம் வெனிசுலாவை நோக்கி நகரும் சக்தி வாய்ந்த திட்டத்தை அமெரிக்க அரசு செயற்படுத்த முயல்கிறது.

**பனாமா - வெனிசுலா**

வரலாறு மீண்டும் திரும்பி உள்ளது. நேரமும் சூழலும் கூட அசாதாரணமாக உள்ள நிலையில் தான் பொருளாதார ஆக்கிரமிப்பில் ஓர் நாட்டின் இறையாண்மை அழிக்கப்பட்டுள்ளது.

வெனிசுலா மீதான தாக்குதலும், அதிபர் மதூரோ நாடுகடத்தப்பட்டு கைதியாகி சிறையில் அடைக்கப்பட்ட நிகழ்வும் இதனையே உணர்த்துகின்றன.

இதே தினத்தில் ஜனவரி 3, 1990 பனாமா ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அதிபர் நோரியாகா கைதாகி அமெரிக்கா கொண்டு செல்லப்பட்டார். 36 ஆண்டுகள் இடைவெளியில் அதே திகதியில் இரு வேறு இலத்தீன் நாடுகளின் தலைமைத்துவம் அமெரிக்க அரசால் கைப்பற்றப்பட்டது. அதே இராணுவ ஆக்கிரமிப்பு நடைமுறை.அதே போதைப் பொருள் கடத்தல் என்ற காரணம்.

ஆனால் உண்மையான நோக்கம் வேறு. மூலவளங்கள் மற்றும் வர்த்தக நடைமுறைகள் மீது கட்டுப்பாட்டை பெறவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது வெளிப்படை.

**ஐ.நா.சபையில் வாக்குவாதம்**

வெனிசுலாவில் அதிபர் நிக்கோலஸ் மதுரோ அமெரிக்க ராணுவத்தால் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட விவகாரம் சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து கடுமையான கண்டனக் கருத்து தெரிவித்துள்ளார் ஐ.நா. பொதுச் சபையின் தலைவர் அன்னலேனா பேயர்போக்.

ஐ.நா. சாசனத்தின் 2 ஆவது பிரிவின்படி, எந்தவொரு நாட்டின் அரசியல் சுதந்திரத்திற்கும் அல்லது பிராந்திய ஒருமைப்பாட்டிற்கும் எதிராக அச்சுறுத்தல் விடுப்பதையோ அல்லது படை பலத்தை பயன்படுத்துவதையோ உறுப்பு நாடுகள் தவிர்க்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

உலக ஒழுங்கு என்பது சட்டத்தின் அடிப்படையில் அமைய வேண்டுமே தவிர, ஆட்சியதிகாரத்தைக் கொண்டு வலிமையைப் பிரயோகிப்பதாக இருக்கக்கூடாது என அமெரிக்காவின் நடவடிக்கைக்கு மறைமுகமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்படும் போது மட்டுமே பாதுகாப்பான மற்றும் நீதியான உலகம் சாத்தியப்படும் என்றும், சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளிப்பதே உலக அமைதிக்கு அடிப்படை என்றும் அவர் தனது உரையில் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் என்பது உறுப்பு நாடுகள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப செயல்படுவதற்கான ஒன்று அல்ல என்றும், அது சர்வதேச விதிகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டிய கட்டாய வழிகாட்டுதல் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் அமைதியான காலங்களிலும், தற்போது வெனிசுலாவில் ஏற்பட்டுள்ள ராணுவ நடவடிக்கை போன்ற நெருக்கடி நேரங்களிலும் சர்வதேச செயற்பாடுகளை நெறிப்படுத்தும் ஒரே கட்டமைப்பாக ஐ.நா. சாசனமே விளங்குகிறது எனவும் அவர் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

உலக தொலைக்காட்சிகளில் வெனிசுலா அதிபரை கைதியாக காட்டி டிரம்ப் அரசு துள்ளி குதித்ததோடு இனி வெனிசுலாவை அமெரிக்காவே ஆளும் என்று அறிவித்தமைக்கு பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

■

# மாத ராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த ஆண்டு சவாலான ஆண்டாக இருக்கும். உங்களுடைய பொறுமையைச் சோதிக்கும் சூழ்நிலை ஏற்படும். தொழில் தொடர்பான விடயங்கள், நிதி, உறவுகள் தொடர்பான விடயங்களில் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும். ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துவது நன்மை பயக்கும். அனுமன் வழிபாடு செய்தவன்மூலம் நன்மை பயக்கும்.

1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 3 ஆம் வீட்டில் நிற்பதால் குடும்பத்தினருடன் விட்டுக் கொடுத்து போகவும். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். ஏழரைச்சனியில் விரயச் சனி நடைபெற்றுக் கொண்டிருப்பதால் செலவுகள் அதிகமாகும் வெளிநாடு போக விசா கிடைக்கும். புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வருவீர்கள்.

## இடபம்

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்தப் புத்தாண்டு முன்னேற்றத்துக்கான ஆண்டாக இருக்கும். வரும் குருப்பெயர்வு உங்களுக்கு தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தும். உத்தியோகம், வியாபாரம், தொழில், படிப்பு தொடர்பான விடயங்களில் நன்மைகள் கிடைக்கும். திருமணம் நடப்பதற்கான வாய்ப்புள்ளது. வெள்ளிக்கிழமை தோறும் ஏழைகளுக்கு தானம் கொடுப்பது ஏற்றத்தை தரும்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 2ஆம் வீட்டில் நிற்பதால் சாதுர்யமாக பேசி காரியம் சாதிப்பீர்கள். சொத்து மற்றும் புது வகைகளில் நகை வாங்குவீர்கள்.1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 3 ஆம் வீட்டுக்கு செல்வதால் சேமிப்புகள் கரையக்கூடும்.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்தப் புத்தாண்டு அற்புதமான ஆண்டாக இருக்கும். ஊடகத் துறையினர், ஆசிரியர்கள், தகவல் தொடர்புத் துறையில் இருப்பவர்களுக்கு ஏற்றம் நிறைந்த ஆண்டாக இருக்கும். பண வரவு நன்றாக இருக்கும். திருமணம் நடக்கும் யோகம் உள்ளது. புதன்கிழமை தோறும் பசு மாடுகளுக்கு உணவளிப்பது நன்மை பயக்கும்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை ஜென்ம குருவாக நிற்பதால் வருங்காலத்தைப் பற்றிய பயம் மனதை வாட்டும். முடிவெடுப்பதில் தடுமாற்றம் ஏற்படும். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 2-ம் வீட்டுக்கு செல்வதால் திடீர் பணவரவு உண்டு. வீடு, மனை வாங்குவீர்கள். வீட்டில் அடுத்தடுத்து சுபநிகழ்ச்சிகள் நடக்கும்.

## கடகம்

கடக ராசிக்காரர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் ஆண்டாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் கவனமாக இருக்க வேண்டும். முதலீடுகளை செய்யத் தொடங்குவீர்கள். சிவன் வழிபாடு உங்களுக்கு ஏற்றத்தை தரும்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 12 ஆம் வீட்டில் நிற்பதால் விரயச் செலவுகள் வரக்கூடும். குடும்பத்தில் விட்டுக் கொடுத்து போகவும். யாரையும் குறை கூற வேண்டாம். 1.6.2026 முதல் 14.10.2026 வரை ராசிக்குள் நுழைந்து ஜென்ம குருவாக இருக்கிறார். சகோதர வகையில் அனுசரித்துப் போகவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு சமூகத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். வெளிநாடு தொடர்பான வாய்ப்புகள் வரும். திடீர் பண வரவு உண்டாகும். சகோதரர்களின் ஆதரவு கிடைக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துவது நல்லது. குலதெய்வ வழிபாடு முன்னேற்றத்தை தரும்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் லாப வீட்டில் நிற்பதால் வீடு, மனை வாங்குவீர்கள். வாகன வசதி பெருகும். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். பணப் புழக்கம் அதிகரிக்கும். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 12 ஆம் வீட்டுக்கு செல்வதால் எல்லா விஷயங்களிலும் நிதானம் அவசியம்.

## கன்னி

கன்னி ராசிக்காரர்களுக்கு அலுவலகம் தொடர்பான விடயங்களில் கவனமாக இருக்க வேண்டும். திட்டமிட்டுச் செலவிடுவது நன்மை பயக்கும். காதல் உறவுகளில் கவனமாக இருப்பது நன்மை பயக்கும். ஒழுக்கம் மற்றும் கடின உழைப்பைக் கொடுப்பது நல்ல பலன்களைத் தரும். பறவைகளுக்கு உணவளிப்பது ஏற்றத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்தும்.

1.2026 முதல் 31.5.2026 வரை குரு பக வான் ராசிக்கு 10 ஆம் வீட்டில் நிற்பதால் எந்த வேலையும் இழுபறியாகி முடியும். அரச சம்பந்தப்பட்ட விஷயங்களில் கவனமாக இருங்கள். உங்களைப் பற்றிய விமர்சனங்களும், வதந்திகளும் பரவும். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் லாப ஸ்தானத்துக்குள் வருவதால் வராமலிருந்த பணம் தடையின்றி வரும்.

## துலாம்

துலாம் - துலாம் ராசிக்காரர்களுக்கு பெயர், புகழ், அங்கீகாரம் கிடைக்கும் ஆண்டாக இருக்கும். கலைத் துறை, சினிமாத் துறையினருக்கு முன்னேற்றம் நிறைந்த ஆண்டாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையே அந்நியோன்யம் பெருகும். ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துவது நல்லது. லட்சுமி வழிபாடு உங்களுக்கு அனுகூலத்தை ஏற்படுத்தும்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 9 ஆம் வீட்டில் நிற்பதால் வீடு, வாகனம் வாங்குவீர்கள். திடீர் பணவரவு உண்டு. சிலருக்கு பங்கு சந்தை மூலம் பணம் வரும். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 10 ஆம் வீட்டுக்கு செல்வதால் உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகமாகும். இடமாற்றம் உண்டு. சேமிப்புகள் கரையும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசியினருக்கு மாற்றத்திற்கான ஆண்டாக இருக்கும். திடீர் லாபம் ஏற்படும். வாகனம் ஓட்டும்போது மிகுந்த கவனமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் ஏற்றம் ஏற்படும். முருகர் வழிபாடு உங்களுக்கு மன நிம்மதியைத் தரும்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 8 ஆம் வீட்டில் நிற்பதால் வாகனத்தில் எச்சரிக்கை அவசியம். பணத்தை கவனமாகக் கையாளுங்கள். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 9ஆம் வீட்டுக்குச் செல்வதால் பணப் பற்றாக்குறை நீங்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சொந்த ஊரில் மதிப்பு, மரியாதை கூடும்.

## தனுசு

தனுசு ராசிக்காரர்களுக்கு அதிர்ஷ்டம் நிறைந்த ஆண்டாக இருக்கும். குரு பகவான் நல்ல நிலையில் இருப்பதால் செல்வம் பெருகும். பிள்ளைகள் விடயங்களில் அனுகூலம் ஏற்படும். படிக்கும் மாணவர்களுக்கு முன்னேற்றமான ஆண்டாக இருக்கும். வியாழக்கிழமை தோறும் கடலைப்பருப்பு தானமாக அளிப்பது நன்மையைத் தரும்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 7 ஆம் வீட்டில் நிற்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் மதிப்பார்கள். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 8 ஆம் வீடான அஷ்டமத்தில் அமரப் போகிறார். கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்து போகவும். 14.10.2026 முதல் 31.12.2026 வரை குருபகவான் ராசிக்கு 9ஆம் வீட்டுக்கு செல்வதால் பணப்புழக்கம் அதிகரிக்கும்.

## மகரம்

மகர ராசிக்காரர்களுக்கு இந்த ஆண்டில் உங்களுடைய வேகம் சற்று குறையும். ஆனால், உறுதியுடன் செயற்படுவீர்கள். பொறுப்புகள் கூடும் ஆண்டாக இருக்கும். திட்டமிட்டு செய்யும் காரியங்களில் ஏற்றம் ஏற்படும். சனிக்கிழமை தோறும் சுவாமிக்கு தீபம் ஏற்றுவது ஏற்றத்தை தரும்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 6 ஆம் வீட்டில் நிற்பதால் காரியத் தடைகள், அலைச்சல் வரக்கூடும். குடும்பத்தில் குழப்பங்கள் நிலவும். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 7 ஆம் வீட்டுக்கு செல்வதால் திடீர் பண வரவு உண்டு. 14.10.2026 முதல் 31.12.2026 வரை குருபகவான் ராசிக்கு 8 ஆம் வீட்டுக்கு செல்வதால் வாகனத்தில் கவனம் தேவை. 14.5.2026 முதல் 8.6.2026 வரை 6 ஆம் வீட்டில் சுக்கிரன் மறைவதால், நகைகளைக் கவனமாகக் கையாளுங்கள்.

## கும்பம்

கும்ப ராசிக்காரர்களுக்கு கடின உழைப்பை போடும் ஆண்டாக இருக்கும். சோம்பலை விட்டுவிட்டு திட்டமிட்டு காரியங்களை முடிப்பது நல்லது. விரயங்கள் ஏற்படும் வாய்ப்புள்ளதால் சேமிப்பில் சிறிது கவனம் செலுத்துவது நல்லது. ஏழைகளுக்கு தானம் கொடுப்பது, உதவுவது நன்மையைத் தரும்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 5 ஆம் வீட்டில் நிற்பதால் புது சொத்து வாங்குவீர்கள். உடல் நலம் சீராகும். வாகனத்தை மாற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு உயரும். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 6 ஆம் வீட்டுக்கு வருவதால் தந்தையாருக்கு உடல் நலம் பாதிக்கும். அரச காரியங்கள் தடைபடும்.

## மீனம்

மீன ராசிக்காரர்களுக்கு சுற்றுலா செல்லும் யோகம் உண்டு. நிறையப் பயணங்களை மேற்கொள்வீர்கள். ஏழைகளுக்கு உதவுவது, தானம் கொடுப்பது, தர்ம காரியங்களில் ஈடுபடுவது போன்றவற்றை செய்யும் யோகம் ஏற்படும். விஷ்ணு சஹஸ்ரநாமத்தை பாராயணம் செய்வது ஏற்றத்தை தரும்.

14.10.2026 முதல் 31.12.2026 வரை குருபகவான் ராசிக்கு 6 ஆம் வீட்டுக்கு செல்வதால் சிலர் வீடு மாறுவீர்கள். வாகனப் பழுது நீங்கும். நீண்ட நாளாக இழுபறியாக இருந்த சொத்து வழக்குகள் முடிவுக்கு வரும். உடன் பிறந்தவர்களின் ஆதரவுடன் பூர்வீக வீடு, மனை, விவசாய நிலம் ஆகியவற்றை நல்ல விலைக்கு விற்பீர்கள். வெகுநாட்களாக நினைத்துக் கொண்டிருந்த அனைத்தும் நிறைவேறும். புதிய கார் வாங்குவீர்கள். சொந்த ஊரில் மதிப்பு கூடும்.



தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284



# பந்தாடப்படும் பழங்குடியினர்

● சியாமிளா யோகேஸ்வரன்

**60000** ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்த பண்பாட்டைக் கொண்டவர்களாக அமைதியான வாழ்க்கையை வாழ்ந்து வந்த மூத்த குடியினரின் இயற்கையோடு ஒன்றிய இயல்பு வாழ்க்கையானது, அவுஸ்ரேலியாவை ஆக்கிரமித்த ஆங்கிலேயர்களால் சிதைக்கப்பட்டது. மொழி, பண்பாடு, கலாசாரம் என்பவற்றுடன் மூத்த குடிமக்களின் இருப்பையே அழித்து விடுவதற்கு ஆக்கிரமிப்பாளர்கள் முயற்சி எடுத்தார்கள் என்பது வரலாற்றில் கறை படிந்ததொரு நிகழ்வாகும். அவுஸ்ரேலியப் பழங்குடி மக்கள் உலகிலேயே மிகத் தொன்மையான இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனித நாகரிகம் ஒன்றைச் சார்ந்தவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள் .

மற்றவருடன் தொடர்பாடலை மேற்கொள்ளக்கூடிய மார்க்கமாகவே மொழி கருதப்படுகின்றது என்றாலும் மூத்தகுடியினரின் மொழியானது பண்பாட்டை அறிவூட்டும் கதைகளையும் சடங்குகளையும் சட்டங்களையும் சொல்வனவாக இருந்தன. அத்துடன் இயற்கையுடனும், ஆன்மிகத்துடனும் முன்னோர்களுடனும், பூமியுடனுமான தொடர்பை ஏற்படுத்தும் கருவியாகவும் அவர்களின் மொழி கருதப்பட்டிருக்கின்றது. கனவுக்கால கதைகள் என்பது இந்தக்குடிமக்களின் பாரம்பரியத்தை ஒட்டி உருவாக்கப்பட்ட கதைகளாகவும் அவர்களுக்கே உரித்தானதொன்றாகவும் இருக்கின்றன. இந்தக்கதைகள் உலகம் எப்படி உருவானது மற்றும் மனிதர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை விளக்குகின்றன. இந்தக்கதைகளின் ஊடாக உலகம் உருவான வரலாறு, சட்டம், ஒழுக்கம், மனிதர் இயற்கை உறவுகள், வாழ்வில் நடைமுறைப்படுத்தப்படும் ஆன்மிகக்கருத்துகள் என்பன வாய்வழியாகச் சொல்லப்பட்டன.

குடியேற்றவாதிகளின் ஆக்கிரமிப்புக்கு முன்னதாக 250 க்கும் மேற்பட்ட மொழிகளும், 800 க்கும் அதிகமான வட்டார மொழி வழக்குகளும் இருந்ததாகக் கூறப்படுகின்றது. எழுத்து வழக்கை விட வாய்மொழி மரபு மூலமே அதிகமான மொழிகள் வழக்கில் இருந்திருக்கின்றன. வரலாறுகள், சட்டங்கள், வழக்கங்கள், நம்பிக்கைகள், கதைகள், பாடல்கள் போன்றன வாய்மொழியாகவே தலைமுறைகளுக்கிடையில் கடத்தப்பட்டிருக்கின்றன. காலப்போக்கில் பெரும்பாலான மொழிகள் வழக்கினின்றும் அருகிப்போனமைக்கு இதுவும் ஒரு காரணம் என்றாலும் அந்நிய மொழியான ஆங்கிலம் ஆட்சி மொழியானமையே பூர்வகுடிகளின் மொழிகள் வழக்கொழிந்து போவதற்கான முக்கியமான காரணமாயிருந்திருக்கக் கூடும். Yolnju Matha (யோல்ஞூ மாதா), Pitjantjatjara ( பிட்ஜன்ட்ஜட்ஜரா), Arrernte (அர்ரெண்டே), Wiradjuri (விரட்ஜூரி), Noongar (நூங்கார்) Gamilaraay (கமிலராய்) ஆகியன பூர்வகுடிமக்கள் பேசிய சில மொழிகளின் பெயர்களாகும்,

உலகின் பழமையான கலை வடிவங்களில் ஒன்றான பாறை ஓவியங்கள், கல் செதுக்கல்கள் மற்றும் உடல் ஓவியங்கள் மூலமும் மூத்த குடிமக்களின் வரலாறு பதிவாக்கப்பட்டிக்கின்றது. இசை, நடனம், கதையாக்கம் ஆகியவற்றின் மூலம் அவர்களின் கலாசாரம் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டிருக்கின்றது. கனவுக்காலக்கதைகளும் நிலத்தின் வரைபடங்களும் புள்ளி ஓவியம் (Dot Painting) எனப்படும் ஓவியத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த ஓவியக்கலையும் மூத்த குடிமக்களுக்கே உரியதொன்றாகும். இவர்கள் பாவிக்கும் சின்னங்களுக்கும் மனிதர், நீர், பயணம், விலங்குகள் போன்ற தனியான அர்த்தம் இருப்பதால், அவையும் தனித்துவமான தொடர்பாடல் முறையாகவே இருந்திருக்கின்றன.

தாம் வாழும் பூமியுடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டவர்களாகப் பூர்வ குடிமக்கள் காணப்பட்டிருக்கின்றனர். வாழ்கின்ற நிலத்தை ஒரு சொத்தாகக் கருதாமல் உயிருள்ளதொன்றாகவே மதித்துப் போற்றியிருக்கின்றார்கள். அவர்கள் பேசிய மொழிகள் யாவும் குறிப்பிட்ட நிலப் பகுதியுடனும் அதன் இயல்புடனும் தொடர்புடையதாகவே காணப்படுகின்றன. நிலமானது மூதாதையர்களுடன் தொடர்புபட்டிருப்பதாகவும் வாழ்கின்ற மக்களுடன் பின்னிப்பிணைந்திருப்பதாகவும் கருதியதால் நிலத்துக்கு அவர்கள் கொடுக்கும் மரியாதை உயர்வாகவே காணப்படுகின்றது. அதனால் இயற்கையுடனும், நிலத்துடனும் ஒன்றிணைந்ததாகவே அவர்களின் வாழ்க்கை முறையும் அமைந்திருந்தது.

இயற்கையையும், சுற்றுச்சூழலையும் சேதப்படுத்தாத பழங்குடியினரின் வாழ்க்கை முறை, உணவு முறை மற்றும் உணவு சேகரிப்புத் தன்மை போன்றன பருவகாலத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. விலங்குகள் மற்றும் தாவரங்கள் பற்றிய ஆழ்ந்த அறிவைப் பூர்வகுடிகள் கொண்டிருந்தமையால், இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்து தமக்குத் தேவையான உணவையோ மருத்துவ வசதிகளையோ தாம் வாழும் சூழலிருந்து பெற்று எளிமையான வாழ்வை மேற்கொண்டு வந்திருந்தனர்.

அவர்களின் சமூகக் கட்டமைப்பானது உறுதியாகக் காணப்பட்டிருந்ததுடன் ஒற்றுமையைப் பேணும் வகையிலும் அமைந்திருந்தது. குடும்ப உறவுகள் பரந்தனவாகவும், உறவுகளுக்கிடையில் நெருக்கத்தைப் பேணும் வகையிலும் காணப்பட்டிருந்தன. அவுஸ்ரேலியப்பழங்குடியினரின் கலாசாரமும் தமிழ் கலாசாரமும் உலகின் மிகப் பழமையான தொடர்ச்சியான கலாசாரங்களாகும். உணவு மற்றும் மற்றைய வளங்களைத் தம்மிடையே பகிர்ந்து கொள்ளுதல், தனிநபர் வாழ்க்கையை விடச் சமூக நலனுக்கு முக்கியத்துவம் அளித்தல், மூத்தவர்களை அறிவின் பாதுகாவலர்களாக மதித்தல் போன்ற மூத்த குடிமக்களின் வாழ்க்கை முறைமை தமிழர்களின் பண்பாடு போன்றே காணப்பட்டன. அத்துடன் இயற்கை, மொழி, ஆன்மிகம் மற்றும் சமூக ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையானது இரண்டு கலாசாரங்களுக்கும் பொதுவான அம்சங்களாகும்.

திட்டமிட்ட இன அழிப்பை குடியேற்றவாதிகள் மேற்கொண்டபோது, பழங்குடியின மக்கள் தம் சொந்த மொழியில் பேசுவது தடுக்கப்பட்டது. பாடசாலையிலோ அல்லது வேறு கல்விசார் பொது இடங்களிலோ தம் தாய்மொழியைப் பேசிய குழந்தைகள் தண்டிக்கப்பட்டார்கள். இதனால் பல மொழிகள் இப்போது அழிந்து விட்டன அல்லது அழிவின் விளிம்பில் இருக்கின்றன என்பது வருத்தத்தைத் தருவதொன்றாகும். மூத்தகுடிமக்களின் புனித இடங்கள் அழிக்கப்பட்டன அல்லது அணுகுவதற்கான அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் பாரம்பரியச் சடங்குகள், விழாக்கள் மற்றும் கதைகள் அடுத்த சந்ததியினருக்குக் கடத்தப்பட முடியாமற் போயின. மொழி மட்டுமல்லாமல் இயற்கையைப் பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருந்த பழங்குடியினரின் மரபுகளும், வாய்மொழி வரலாறுகளும் வெளியுலகத்துக்குத் தெரிய வராமற் போய் விட்டிருப்பது நிச்சயமாக மாபெரும் இழப்பாகும்.

குடியேற்றவாதிகளின் அராஜகமான போக்கால், பழங்குடியினர் தமது முன்னோர் வாழ்ந்த நிலங்களிலிருந்து வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டதுடன் அவர்களின் ஆன்மிக உறவு பாதிக்கப்பட்டதால் உளரீதியான பாதிப்புக்கும் உள்ளானார்கள். ஒன்று கூடி வாழ்ந்த சமூகங்கள் உடைக்கப்பட்டதுடன், குடும்ப உறுப்பினர்களும் பிரிக்கப்பட்டதால் பேசி வந்த மொழியும், பேணிக்காத்த கலாசாரமும் பெரும் பாதிப்புக்குள்ளாகின. திருடப்பட்ட தலைமுறைகள் தாம் பேணி வந்த மொழி மற்றும் கலாசாரத்திலிருந்து பிரிக்கப்பட்டனர். இங்கு திருடப்பட்ட தலைமுறை எனப்படுவது குழந்தைகள் பெற்றோரிடமிருந்து வலுக்கட்டாயமாக பிரித்து அழைத்து செல்லப்பட்டு அரசு விடுதிகள் மற்றும் வெள்ளையினக் குடும்பங்களிடம் வளர்க்கப்பட்டதைக் குறிப்பதாகும். இந்நிகழ்வுகள் தலைமுறைகளைத் தாண்டிய நிரந்தரமான இழப்புகளை மட்டுமல்லாமல் காலத்தால் ஆற்ற முடியாத மனவலியையும் கொடுத்திருப்பதை மறுக்க முடியாது.

ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பானது மூத்தகுடியினரின் கல்வி, மனநலம் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் மட்டுமல்லாமல் பாரம்பரியமானதும் தனித்துவம்மிக்கதுமான பழங்குடியினரின் மொழி மற்றும் கலாசாரத்திலும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கின்றது. மொத்தத்தில் காலனித்துவக் குடியேற்றம் ஆதிக்குடியினரின் வாழ்க்கையில் நீண்டகாலத்துக்கு நிலைத்திருக்கக் கூடிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதை இலகுவில் மறுத்து விட முடியாது.

இழப்புக்களைக் கடந்து தமது அடையாளத்தை மீட்டெடுக்க பழங்குடியினர் போராடி வருகின்றனர். அருகிப் போய்க் கொண்டிருக்கும் மொழி மற்றும் கலாசாரத்தை மீட்டெடுக்கும் முயற்சிகள், நல்லிணக்கம் மற்றும் சமத்துவமான எதிர்காலத்திற்கு மிகவும் இன்றியமையாதவையாகும். மொழி மீட்புத் திட்டங்கள் மூலம், பழங்குடியினரின் மொழி தற்போதைய தலைமுறையினருக்கு மீளக் கற்பிக்கப்படுகின்றது. அவர்களின் பாரம்பரிய வழக்கங்கள், நடனங்கள் போன்றனவற்றுக்கு மீள உயிர் கொடுக்கும் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. பாடசாலையிலும் மற்றைய பொது இடங்களிலும் பழங்குடியினரின் கலாசாரம் அங்கீகரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படுகின்றது. இந் நடவடிக்கைகளின் மூலம் இழந்தவற்றில் ஒரு சிலவற்றை மீட்டெடுக்க முடியுமாயினும், உலகின் உயர்ந்த நாகரிகமொன்றானது ஆங்கிலேயர்களின் குடியேற்றத்தின் மூலம் தன் சுயத்தை இழந்து விட்டிருக்கின்றது என்பது பேரவலமாகும்.

■

HavenHill
REAL ESTATE

# Thinking of Selling? Sell Smart pay only 1% Commision.

**Selling your home is a big moment.**

That's why we focus on the most important things:
getting you the strongest result, with a smarter, fairer fee structure.

**With Sell Smart, you get:**

- Professional marketing
- Strategic buyer targeting
- Confident negotiation
- A premium, boutique experience

SELL SMART.
SAVE MORE.
ACHIEVE BETTER.



**Shagi Pathmanathan**
Founder / Director
**0413 076 585**
shagi@havenhillrealestate.com.au

**Yasantha De Silva**
Founder / Director
**0432 805 336**
yasantha@havenhillrealestate.com.au

Level 10, 14 Mason St, Dandenong VIC 3175
havenhillrealestate.com.au

Terms and Conditions apply*


PARBOILED RICE
ROSA KEKULU RICE
Muthu Sampa Rice
1kg
ATHAVAN
PRODUCTS
Ginger Powder
Jaffna
CURRY POWDER
PREMIUM
MOONG DAL
(Roasted)
Soya Meat
CHILLI POWDER
EVERYTHING
YOU NEED
ALL IN ONE PLACE!
FAST
DELIVERY
THIS WAY UP
ஆதவன்
ATHAVAN
Cargo Service
Australia to
Sri Lanka
Sri Lanka to
Australia
BEST SERVICES:
Cargo & Shipping Services
Groceries & Household Items
Spices Export & Import
Pooja Products
Boutique Dress & Saree Collection
Contact Us For Details
Sri Ayyappa Pvt LTD
+61 449 722 392
40 David street, Dandenong VIC 3175, Australia
ஆதவன்
ATHAVAN
ஸ்ரீ
AYYAPPA
ATHAVAN